கடவுள் துணை.

# செந்தமிழ்.

தொகுதி-௩௬.] பிரமாதி௵ ஆனி௴ [பகுதி-௮.
Vol. 36. June—July 1939. No. 8.

## கம்பராமாயணசாரம்.

[உ௬௮-ஆம் பக்கத் தொடர்ச்சி.]

### முதற்போர்புரிபடலம்.

இராமனும் இராவணனும் முதன்முதற் போர்புரிந்ததைக் கூறுவது. ராமராவணசேனைகளின் முதற்போரைக் கூறுவதெனலுமாம்.

### போர்புரிதல் துணியப்படுதல்.

இராவணனுக்கு ஆவிநீங்கினலன்றி ஆசைநீங்காதென்று தூதுபோய்வந்த அங்கதன் சொன்னபோது, 'போரன்றி வேறொன்றும் புரிதற்கின்று' என்பது துணியப்பட்டது.

### போர்தொடங்குதல்பற்றிப் பறையறைதல்.

சேனைத்தலைவன் ஆணைப்படி, வள்ளுவர்கள் வானரப்படைவீடு முழுதும் திரிந்து, 'படைவீரர்களே! மலைகளைக்கொண்டும் மரங்களைக்கொண்டும் அகழியைத் தூர்த்திடுங்கள். இராக்கதர் செல்லும் வழிகளெல்லாவற்றிலும் மரங்களைப்போட்டு அவர்கள் போக்குவரவு தடைபடச்செய்யுங்கள். அவர்களைப் போருக்கழையுங்கள். சூரியன், நேரே மேலே செல்லமாட்டாமல், விலகிச் செல்லுகின்ற மதிலின் உச்சிமேலுற்று, அதனை உங்கள் வசப்படுத்துங்கள்' என்று பறையறைந்து பிரசுரப்படுத்தினார்கள்.

### வானரர் அகழியைத் தூர்த்தல்.

இதுவரை கடல்கள் ஏழாயிருந்தன, இதனோடு எட்டாயின: என்னும்படி திரண்ட வானரசைனியம், மலைகளையும் மரங்களையும் கொண்டு அகழியைத் தூர்க்கலுற்றது. அப்போது, அகழிநீரின் சிலபகுதிகள், அந்தச் சேனைக்கு உதவிபுரியமுந்துவனபோல, மதில்வாயில்களூடு புகுந்து ஊரை வளைவனவாயின, வேறுசில

நீர்ப்பகுதிகள், ஆறுகள்போலக் கடலிற் சென்று கலந்தன. மலைகளும் மரங்களும் எறியப்பட்டபோதெல்லாம், தண்ணீருள் முழுகியெழுந்த தாமரைமலர்கள், பலமுறை நீருள்முழுகியெழும் மாதர் முகங்களை ஒத்தன. நீர்நிரம்பியிருந்த அகழி, வானரர்செயலால், நீரொழிந்து வெறுநிலமானது, — செல்வம்நிறைந்திருந்தகுடும்பம் விதியின்செயலால் செல்வம் நீங்கி வறுமையானதுபோன்றது.

### வானரர் மதிலேறுதல்.

அகழியைத்தூர்த்த வானரர், மதிலின்மேலேறி நிமிர்ந்துநின்றபோது, அந்த மதின்மீதுநாட்டிய வெண்டுகிற்கொடிகள்போன்றனர்.

### இராக்கதர் எதிர்த்துவந்து வானரரோடு பொருதல்.

அரக்கர்கள், வானரரை எதிர்த்து வில்லும் வேலும் கொண்டு போர்செய்ய, வானரர், மரமும் மலையுங் கொண்டு பொருதனர். வானரர், இராக்கதரைக் கையால் அடித்தும் காலால் உதைத்தும் நகத்தாற் கிழித்தும் கொன்றனர். இராக்கதர், தோமரமெறிந்தும் அம்பெய்தும் தண்டுகொண்டு தாக்கியும் வேலாற் குத்தியும் வானரரை மாய்த்தனர். வானரர், தளர்வுற்று, மதிலினின்று இறங்கி ஓடலுற்றனர். அரக்கர், வீர ஆரவாரஞ்செய்து, மதில்வாயில் வழியாக வெளியேறி, நெருங்கித் துரத்தக் குரங்குச்சேனை குலைகுலைந்து சுக்கிரீவன் நின்ற இடத்திலே போய்ச்சேர்ந்தது.

## வடக்குவாயிற் போர்.

### சுக்கிரீவன் பராக்கிரமம்.

சுக்கிரீவன், ஒரு பெரு மராமரத்தைக் கையிற்கொண்டு, துணை வேண்டாது, தான் ஒருவனே தனியனாய்த் தேர்ப்படை யானைப்படை குதிரைப்படை காலாட்படை யாகிய நால்வகைப்படைமுன்னும் தோன்றி, ஒவ்வொருபடையையும் ஒவ்வொரு சுக்கிரீவன் எதிர்த்தானென்னும்படி மிகு விரைவாய் எதிர்த்துத் தேர்களை உருளும்படியும் யானை குதிரைகள் காலொடியும்படியும் தன் கையிற் பிடித்திருந்த மராமரத்தால் அடித்துத் தாக்கினான். அப்போது தளர்ந்திருந்த வானரவீரர், தைரியங்கொண்டு அவனை அடைய, இருசேனைகளுக்கும் இடையே மூண்ட பெரிய சண்டையில், எண்ணிறந்த வானரரும் இராக்கதரும் இறந்தனர். வானரரினும் இராக்கதர் மிக அதிகமாக இறந்தனர்.

## வச்சிரமுட்டி போர்.

வானரர் அரக்கரை மிகத் தகர்த்ததைக் கண்டு, வச்சிரமுட்டி யென்ற இராக்கதப்படைத்தலைவன், கடலிடையே கப்பல் செல்லல் போலப் படையிடையே தேரைச் செலுத்திச் சரமாரி பொழிந்து வானரசேனையை மடியச்செய்தான்.

அதைக்கண்ட சுக்கிரீவன், அவன்தேர்மீதுபாய்ந்து, வானரரை மாய்த்தற்குக்கருவிகளாயிருந்த அவனுடையவில்லையும் அம்புப்புட்டிலையும் தொலைத்து, அவனுடலைச் சிதைத்தொழித்துச்சென்றான்.

மலைகுலைந்தாற்போல, வச்சிரமுட்டி நிலைகுலைந்து அழிந்ததைக் கண்ட இராக்கதர், குலைகுலைந்து, (பின்னங்கால் பிட்டந்தட்ட) ஓடி ஊருக்குள்ளேபுகுந்தனர். வானரவீரர் வெற்றிமுழக்கஞ்செய்தனர்.

## கிழக்குவாயிற்போர்.

### கும்பானு இடும்பனால் மாய்தல்.

வடக்குவாயிற்போர் இவ்வாறாகக் கிழக்குவாயிலிலே இராக்கதரும் வானரரும் எதிர்த்துப் பொருதுகொண்டிருந்தபோது, வானரசேனையின் தலைவனான நீலன், ஒரு மராமரத்தை வேரோடு பிடுங்கி, அதனால் இராக்கதசேனையைத் தாக்கித் தகர்ப்பானானன். அதுகண்ட இராக்கதப்படைத்தலைவன் கும்பானுவென்பான் சரங்கள் துரந்து கூட்டங்கூட்டமாகக் குரங்குகளைக் கொன்றான்.

அதுகண்ட கரடிகட்கிறைவனான இடும்பன், ஒரு மலையைக் கையிலே எடுத்துக்கொண்டு, கும்பானு எதிரேபோய்க் குதித்தான். அவன் எய்த அம்புகள் தன்னைத் தாக்குமுன் இவன் மலையை எறிந்து அவன்வில்லை ஒடித்துத் தேரும் குதிரையும் பாகனும் சிதையச்செய்தான். அவன் மேகத்தினின்று பூமியிற் பாயும் இடிபோலத் தேரினின்று கீழே குதித்து இவனைக் குத்த, இவன் அவனைத் தலையில் அடித்துச் சாகச்செய்தான்.

### வானரசேனாபதி நீலன், இராக்கதசேனாபதி பிரகத்தனைக் கொல்லல்.

இராவணசேனாபதியான பிரகத்தன், தன்கீழ்ப் படைத்தலைவனான கும்பானு கொல்லப்பட்டதைக்கண்டு, கோபித்துத் தன்வில்லை வளைத்து, அம்புகளெய்து வானரப்படையை அழியச்செய்தான். அதுகண்ட வானரசேனாபதி நீலன், கோபங்கொண்டு, ஒரு குன்றை எடுத்துக்கொண்டுசென்று, அதனால் இராக்கதசேனையை அழிக்கப்

பிரகத்தன் அம்பெய்து அந்த மலையைத் தூளாக்கினன். அப்போது, நீலன், ஒரு மராமரத்தைப் பிடுங்கி, அதனால் தாக்கப் பிரகத்தன் வில்லும் கொடியும் தேரும் தகர்ந்தன. தேர் தகராவுறக் கண்டவன், கீழே குதித்துக் கண்கள் தீப்பொறி கக்க வாயை மடித்துக்கொண்டு தான் பிடித்திருந்த தண்டுடன் ஓடிவந்தான். அவனை இவன் தாவிப் பிடித்து அவன் பிடித்திருந்த தண்டுடன் விண் தொடும்படி வீசியெறிந்தான். விண்மேற் சென்றவன், மண்மேல் விழுந்தவுடன், தன்னை விண்ணிலெறிந்து வீர ஆரவாரஞ்செய்து கொண்டிருந்தவனைத் தன் கைத்தண்டினால் தாக்கினன். தாக்கப்பட்டவன் சற்றும் தளராதவனாய்த் தன்னைத் தாக்கிய தண்டைப் பிடுங்கியெறிந்துவிட்டுத் தாக்கியவனை இரத்தங்கக்கக் குத்தினன். குத்தப்பட்டவன் தண்டிழந்த கையினால், தன்னைக் குத்தியவனை, அவன் எதிர்பார்க்குமுன்னே, திடுக்கிடும்படி திருப்பிக்குத்தினன். இவ்வாறாக, இராக்கத வானர சேனாதிபர் இருவரும் எதிரெதிர் பொருத போர்த்திறமை, புகலவொண்ணாததாயிருந்தது. முடிவாகப் பிரகத்தனை நீலன் வாலினாற் சுற்றி, நெற்றியிலும் மார்பிலும் தோளிலும் அறைந்து கொன்றான். அதுகண்டு, தேவர்கள் ஆவலங் கொட்ட அரக்கர் அஞ்சி ஓடினர்.

## தெற்குவாயிற் போர்.

### அங்கதன் சுபாரிசனைக் கொல்லல்.

தெற்குவாயிலில் அங்கதனால் அரக்கர்படைத்தலைவன் சுபாரிசன் இறக்க, இராக்கதர் எதிர்நிற்கமாட்டாமல் இலங்கையினுள்ளே ஓடி ஒளிந்தனர்.

## மேற்குவாயிற் போர்.

### துன்முகன் அனுமனால் தொலைதல்.

மேற்குவாயிலில் அரக்கர்படைத்தலைவன் துன்முகனும் அவனோடு வந்தெதிர்த்த இருநூறுவெள்ளம் இராக்கதவீரரும் அனுமனால் ஆவிநீங்கினர்.

### இராவணன் போர்க்குப் புறப்படல்.

நான்குதிசைகளுக்கும் சென்றிருந்த ஒற்றர், திரும்பிவந்து எல்லாத்திசைகளிலும் இராக்கதர் தோற்றதை இராவணனுக்கு இரகசியமாகக் காதில் ஓதினர்கள்.

எதிரிகளை அழிக்கக் கோபத்தீ மூண்டுகொண்டிருந்த இராவணன் நெஞ்சுள்ளே, ஒற்றர் உரைத்த வார்த்தைகள் காதுவழியாக நெய்போலப் புகுந்தவுடனே, அந்தக் கோபத்தீ, குதித்தெழுந்து கொழுந்துவிட்டெரிந்து விழிகள் வழியாக வெளியாக, (தீக்குத் துணையாகக் காற்றுச்சேர்ந்தாற்போல) மூக்கினின்று பெருமூச்சுக் காற்று வீசியது. அவன், 'பெருவீரனான பிரகத்தனை யார் கொன்றார்'? என, ஒற்றர், 'நீலன் கொன்றான்' என்றார். 'அமரர்கோன் வாழ்வை அடியோடழித்த மலைபோன்ற பெரிய அரக்கன் எலி போன்ற சிறிய குரங்கினால் இறந்தானென்ற வார்த்தை, என் காதைச் சுட்டது, கருத்தையும் சுட்டது; தீயையும் பகையையும் சிறிதென இகழுதல் அறிவுடைமையன்று' என்று, சோகக்கண்ணீர் துளும்பச் சொல்லி, நீர்ததும்பிய கண்கள் நெருப்புப்போலச் சிவக்க, போருக்குப் புறப்படுவானாகி, ஆயிரங்குதிரை பூண்டதும் அமரர்கோன் திறையாக அளித்ததுமான தேரிலேறி, மார்பிலே கவசந் தரித்துக் கையில் விற்பிடித்து, தோளில் அம்புப்புட்டில் தூக்கித் தும்பைப்பூச் சூடினான். வெண்சாமரம் வீசப்பெற்ற அவன், வெண்ணுரைத்திரைபரந்த கருங்கடல் போன்றான். வெண்கொற்றக்குடை மேலே விளங்க, அவன் வீற்றிருந்த தோற்றம், வெள்ளிய சந்திரனுக்குக்கீழ் விளங்கும் கரிய மேகக்காட்சியை ஒத்தது. அலை யொலித்தல்போல முரசு முழங்கும் சேனைக்கடல்நடுவே, தேர்மீதிருந்த அவன், ஊழிக்காலத்துக் கடல்நடுவே தோன்றும் மேருவொத்து விளங்கினான். வீணைவடிவம் எழுதப்பெற்ற அவனுடைய கொடிச்சீலை படபடத்து ஆடுதல், உகாந்தகாலத்திலே உயிர்களையெல்லாம் வாயிலிடுதற்கு உலகுமுழுதையும் வளைத்துச் சுழல்கின்ற எமனுடைய நாக்கை ஒத்தது.

## இராமன் போர்க்குப் புறப்படல்.

இராவணன் போர்க்களம் புகுந்ததை வானரதூதுவர் இராமனுக்குத் தெரிவித்தார்கள். உடனே, சீதைபிரிவுகருதி மெலிந்திருந்த தோள்கள் போர்புரிதல்கருதிப் பூரிப்புற்றன. அரையில் மரவுரியை இறுகச் சுற்றி, அதன்மேல் உடைவாளைக் கட்டிக் காலிலே வீரக்கழல்களைப் பூட்டி, மார்பில் கவசமணிந்து, கையில் வில்லேந்திக் கவிஞர்நாவிலே இடையீடின்றி மேன்மேலாக வரும்

சொற்கள்போல, எடுக்க எடுக்கத் தொலையாத அம்புகளடங்கிய தூணி*யைத் தோளில் தொங்கவிட்டுத் தும்பைசூடினன்.

இவ்வாறு யுத்தசன்னத்தனை இராமன், சேனையின் பின்னணியினின்ற இலக்குமணனைச் சேர்ந்தான். அப்போது இருபக்கத்துப்படைகளும் போர்புரிய, வானரர்பிணங்கள் வெள்ளிமலைபோலவும் இராக்கதர் பிரேதங்கள் கருங்கல்மலைபோலவும் குவிந்தன. அரக்கரழிவு வானரரழிவினும் அதிகமாயிற்று. அதுகண்ட இராவணன், கோபமூண்டு, தன் வில்நாணைத் தெறிக்க, அதன் ஒலியைக் கேட்ட வானரங்கள், இடியோசை கேட்ட பாம்புகள் போலப் பயந்தன. பல ஓடின. சில இறந்தன. இராவணன் தன் வில்நாணைத் தெறித்தெழுப்பிய பேரொலியால் அவன் படையிலுள்ள அரக்கரே நடுக்கமடைந்தாரென்றால், எதிர்ப்படையிலுள்ள குரங்குகள் நடுங்கியதைக் கூறுவானேன். இராமலக்குமண அநும சுக்கிரீவர் நால்வரே நடுங்காதிருந்தார்.

## இராவண சுக்கிரீவர் போர்.

தன்படை ஓடக்கண்ட சுக்கிரீவன், இராவணனை எதிர்த்து இந்திரனது வச்சிராயுதமென்று சொல்லும்படியான ஒருமலையை எறிந்தான். அதை அவன் ஓரம்பால் தூளாக்கினன். உடனே சுக்கிரீவன் ஒரு பெருமரத்தைப் பிடுங்கினன். அதனை இராவணன் அநேக அம்புகளெய்து ஆயிரந்துண்டங்களாக்கினன். அக்கணமே பழையமலையினும் பருமையான பருவதமொன்றைச் சுக்கிரீவன் பறிக்க, அதனை ஓரம்பினால் அறுத்தெரிந்து, மற்றொரு வலிய கொடிய அம்பை அவன் மார்பில் அழுந்தி மறைந்திடும்படி எய்தான் இராவணன். இங்கே நிகழ்ந்த நிகழ்ச்சியை மேலைவாயிலில் நின்ற அநுமான், நேரே பார்த்தவன்போல, (தூர உணர்வால்†) அறிந்து சுக்கிரீவன்முன்னே வந்துசேர்ந்தான்.

[தொடரும்.]

வெ. ப. சுப்பிரமணியமுதலியார்.

---

* தூணி - அம்புப் புட்டில்.

† தூரஉணர்வு, ஆங்கிலத்தில் டெலிபதி (Telepathy) எனப்படுவது.

ஸ்ரீ:

# பழனிக்கோவை.

[௩௪௨-ஆம் பக்கத் தொடர்ச்சி.]

## 4. கனவிழந்துரைத்தல்.

சயந்தன் கனவில்வந் தாண்டோர்வை யாபுரித் தையலையோ
வயந்தங்கொ டென்கன வுற்றநம் மூரர்பொன் மார்புநல்கக்
குயந்தந்தி லேன்சக நாதத்தின் மாலுருக் கொள்குறையை
வியந்தன்பன் பார்த்தென வூடியும் வீணில் விழித்தனனே. (355)

பூம்புனலூரனைக் காம்புறழ்தோளி
கனவிற்கண்ட துனிசொற்றயர்ந்தது.

## 5. விளக்கொடுவெறுத்தல்.

உரியார்க் கழகு தனக்கழுக் காறெய் துடல்விழியான்
புரிமாப்பழிக்கஞ்சிப்பொய்கைபுக்காங்கன்பர்பொய்த்தொளித்தார்
குருவாய் முருகர் பழனியி னீவரக் கூறிலையே
திரிவாயி னேயம் புரிந்திரு டீர்க்குஞ் செழுஞ்சுடரே. (356)

தனித்தணைக்கிடந்தவ டலைவன்மேலூடிப்
பனித்தவணிலங்கும் விளக்கொடுபகர்ந்தது.

இவையிரண்டிற்கும் மெய்ப்பாடும் பயனும் அது.

## 6. வாரம்பகர்ந்து வாயின்மறுத்துரைத்தல்.

பொன்பகட் டாரப்பொன் மார்பச் செறுவிற் புணர்முலையா
மின்பகட் டேர்விட் டுழுவோ ருழுதுண்க மேம்புனலூ
ரன்பகத் தோர்குடி மேல்வாரமுற்று மடைகொடுத்தோம்
நன்பகற் போலொளிர் வேலர்வை யாபுரி நாடியர்க்கே. (357)

ஊரன்புயத்தின் வாரம்பகர்ந்தது.

மெய்ப்பாடும் பயனும் அது.

## 7. பள்ளியிடத்தூடல்.

வேண்டா விடுதியென் றூனையை யூரசெவ் வேள்பழனிப்
பூண்டாழ் முலைச்சியர் யாழ்மாதர் போனல்கும் போகமெம்மாட்

டண்டாது மாப்பந்தி வையாளிக் காங்கொ வினிச்சொல்வதென்
நீண்டாத புன்மைக் குடியோமம் மாதவஞ் செய்திலமே. (358)

வெள்ளநீரூரனை மேவியசயனத்
தொள்ளிழைமடவா ளூடியுரைத்தது.

மெய்ப்பாடு—வெகுளி. பயன்—நயப்புணர்த்துதல்.*

## 8. சேவ்வணிவிடுக்க வில்லோர்கூறல்.

உரகா சனப்பரிப் பாகர்வை யாபுரி யூரன்வைகும்
பிரகாச வீதிக்கிம் மான்வாடப் போயிவள் பேர்க்கெய்துமால்
விரகாசை தேர்சங் கரமா முனிபண்டை மெய்யிலெய்தப்
பரகாய நீப்ப வவன்சீடர் வேடங்கொள் பான்மையென்றே. (359)

மாதர்மேற்சென்று தூதுவிட விரும்ப
னகையெனவில்லோர் வகைபடமொழிந்தது.

மெய்ப்பாடு—நகை. எள்ளற்பொருட்டாயிற்† பயன்—தலைமகனைச் செலவழுங்குவித்தல். சிறைப்புறத்தானாக இல்லோர் சொல்லியஃது.

## 9. அயலறிவுரைத்தவ ளழுக்கமெய்தல்.

தம்பொருள் சூறை கொடுக்தோர்கள் வன்றரச் சாதிபுக்குச்
செம்பொருள் பெற்றேன் றிவள்கோலத் தானந் திறமுணர்த்தி
யும்பருக் கும்பர் தருவேள் பழனிநல் லூரர்தம்மை
வம்பொ டொருத்திதந் தியான்சேர வேண்டிற்றென் வல்வினையே.

வயன்மலியூரற் குலகியலுணர்த்தவி
னயலறிவுரைத்தவ ளழுக்கமுற்றது.

மெய்ப்பாடு—அழுகை. பயன்—ஆற்றுமைநீங்குதல்.

## 10. சேவ்வணிகண்ட வாயிலோர்கூறல்.

குலகிரி பேரர் பழனியி லூரற்குக் கூர்ந்துதைய
னுலகியல் கூறவர் தென்னவும் பூவி றெளிப்புணர்த்த

* திருக்கோவையாரில் 'புணர்தல்' என்று காணப்படுகிறது.

† 'மெய்ப்பாடு—நகை, எள்ளற்பொருட்டாகலின்,' என்று திருக்கோவையாரிற் காணப்படுகிறது.

விலகுமங் தாகில மென்னவுஞ் செம்மையி லெய்தியவா
திலகமொண் சாந்தணித் தாராடை யாலெங்குஞ் செக்கர்செய்தே.

துணர்க்குழல்பூப்பிய லுணர்த்தப்புகுந்த
சேயிழையைக்கண்டு வாயிலோருரைத்தது.

மெய்ப்பாடு—பெருமிதம். பயன்—பூப்புணர்த்துதல்.

## 11. மனைபுகல்கண்ட வாயிலவர்கூறல்.

அரக்கெறி வேலர் பழனியன் ஞட்கடங் காப்புலவிக்
கிரக்கமுந் தோன்றிற்றெம் மூரனுங் கூன்மணிக் கேறிழைபோல்
வரக்கர வாங்கடை யிற்றடை தீர்ந்தின்று வந்தமைமால்
குரக்கர் வளைகுளத் தேழ்பல வூடெய்த கோலொக்குமே. (362)

மாபறிந்தூரன் வளமனைபுகுதத்
தாமுறுவாயிலோர் தம்மிலுரைத்தது.

மெய்ப்பாடு—உவகை. பயன்—மெய்ம்மகிழ்தல்.

## 12. முகமலர்ச்சிகூறல்.

அதிர்ப்பாய்ச் சினத்த மயில்சேவல் கிட்டிச்சென் றக்கணமே
விதிர்ப்பாய்ப் பணிசெய்யக் கொள்வோர்வை யாபுரி வேலவனோ தன்
கதிர்ப்பாய் முகபங் கயத்தில்வண் டன்பர்கண் காரிகைதன்
னெதிர்ப்பார்வை யூரர் முகமதிக் கேறிள் மானென்பவே. (363)

மிகுபுனலூரன் றிகழ்மனைபுகுத
முகமலர்கிழத்தி தகைபிறருரைத்தது.

மெய்ப்பாடும் பயனும் அது.

## 13. காலநிகழ்வுரைத்தல்.

முருகுமிழ் முல்லையுங் கங்குலுந் திங்களு முப்பகையாய்
வருகுத னேக்கி யதற்கெதிர் மூன்று மயேசுரற்குப்
பிருகுவின் சாபந் தவிர்த்தோர் பழனியிற் பெற்றிருந்து
முருகுவ னேவள்ளல் பூழைசெல் லான்றந்தி யூர்பவனே. (364)

புலந்திலளிவளென் றிகழ்ந்திடலென்னிவர்
கலந்திடவாயிலிக் கங்குலேயென்றது.

மெய்ப்பாடு—பெருமிதம். பயன்—தலைமகளைச் சிவப்பாற்றுவித்தல்.

### 14. எய்தலெடுத்துரைத்தல்.

சுரதத் தருவிற் புலவிவெங் காறள்ளத் தோய்காண்டப்
பாதச் சிலம்பொலிச் சாகுங்க ளார்ப்பப் பழனிச்செவ்வேள்
விரதப் பயனெனச் சென்றெய்திப் பூந்தளிர் வேய்ந்துகொம்பி
னிரதப் பிரசம் வடிக்துண்ண வூரற் கிசைந்தனவே. (365)

மல்குசீரூரன் மனைக்கிழத்தியொடு
புல்குறுமகிழ்ச்சி புகழ்ந்துரைத்தது.

மெய்ப்பாடு—உவகை. பயன்—*மகிழ்தல்.

### 15. கல்விகருதிப் புலத்தல்.

தாங்தோன்று பொய்கையிற் றோன்றித் தவஞ்செய்யுந் தையலர்முன்
போங்தோர் பழனியன் ஞள்பூ வணையிற் புணர்ந்தங்ஙனே
சேந்தோ டரிக்கண் சிவப்பத்தன் போற்பிறர் சேர்தலெண்ணிக்
காங்தோட் டுருகுழி நீர்வாங்கும் பொன்னெனக் கன்றினளே.(366)

மலர்தலையுலகி னலகிலன்போடு
கலவிநலனுகர்ந்தவள் புலவிதொடங்கியது.

மெய்ப்பாடு—உவகையைச்சார்ந்த வெகுளி; பெருமிதமுமாம். பயன்—மேலது.

### 16. குறிப்பறிந்துபுலந்தமைகூறல்.

சூரூ ரழித்தபின் காலோனை நீத்துத் துணைவற்கொண்டே
தேரூருங் கந்தர் பழனிநல் லூரன் றிறத்தணையும்
வாரூர் முலையென் னினைந்தோ வனந்தர்மஞ் சத்திழிந்தா
ணீரூர் கலத்ததி பாரத்தை மாலுமி நீத்ததென்றே. (367)

விகடக்குறிப்புணர் துகடீர்கற்பினள்
பலரைப்பொருதிப் பள்ளியென்றெழுந்தது.

மெய்ப்பாடு—மருட்சி. பயன்—ஐயந்தீர்தல்.

### 17. வாயிலோர் வாழ்த்தல்.

பிரவுடைப் பேர்மன்னன் பூப்பா யருணைப் பெரும்புலவன்
விரவுடை மாதென்ன வாய்ப்பாடற் செவ்வணி விட்டதற்குக்

* திருக்கோவையாரில் 'மெய்ம்மகிழ்தல்' என்று காணப்படுகிறது.

குரவிடை வாழ்பழ னிக்கந்தர் போற்றெனக் கொற்றவனிவ்
வரவிடை யாள்பொருட் டெய்தலின் வாய்மைய னுற்றவுமே. (368)

மிகவுள்ம்விரும்பிய வேந்தனைவாயிலோர்
தகவுளனென்னத் தம்மிற்புகழ்ந்தது.

மெய்ப்பாடு—உவகை. பயன்—மகிழ்தல்.

## 18. புனல்வரவுரைத்தல்.

தம்பு ளகத்தினுஞ் சூட்டிற்குத் தாமற் றழீப்பெடைக்குக்
கம்புண்மென் றூவியஞ் சேக்கைநல் கூரன் கருணைவெள்ளம்
வம்புள கொங்கைய ராடவை யாபுரி வாய்ப்புதுநீர்
பைம்புள்வல் லோர்வந்த வர்விசெல் யாறெனப் பாய்ந்ததுவே. ()

ஆடுகநீரென் றணிந்துகொண் டில்லிற்
கூடியமகிழ்நனைக் குவலயமுரைத்தது.

மெய்ப்பாடு—பெருமிதம். பயன்—பிரிவுணர்த்துதல்.

## 19. தேர்வரவுகண்டு மகிழ்ந்துகூறல்.

ஈக்கூட்டத் தோர்மதுக் கும்பம்வந் தெய்திடி லீக்குலத்தின்
மீக்கூட்ட நல்வினைப் பேறென்னல் வேண்டும் வியாதர்துணைச்
சேய்க்கூட்டம் போற்றிய சேயோர் பழனியிற் சேயிழைமீர்
கோக்கூட்ட வூர னுலாக்காண்மின் சேர்ந்து குலாவுதற்கே. (370)

மருத்தகுதாரோன் மணித்தேர்கண்டு
பரத்தையர்சேரிப் பாவையருரைத்தது.

மெய்ப்பாடு—உவகை. பயன்—சேரிப்பரத்தையர்க்குப் பாங்காயின ரவர்க்குணர்த்துதல்.

## 20. புனல்விளையாட்டிற் றம்முளுரைத்தல்.

வேல்வர தாபயக் கையோர் பழனி விழாப்பயில்வீர்
பால்வரு திங்கடன் வீட்டல்ல தில்லெனும் பாவைதிருப்
போல்வரு வாள்பின் றமயந்திக் காய்நளன் போல்வருமோர்
நால்வரும் போற்புலம் பாதன்பர்த் தோய்ந்தின்ப நண்ணுதுமே. ()

வரத்துநீராட்டிற் பரத்தைவரனைநோக்கிச்
சதித்தொழின்மடவார் தம்முளுரைத்தது.

மெய்ப்பாடு—அச்சம். பயன்—தலைமகளைத் தங்கட் டாழ்வித்த...

## 21. தன்னை வியந்துரைத்தல்.

இல்லவள் கண்ணன் குருந்தேற்றுஞ் சீரையெட் டாரில்விம்மப்
புல்லுமின் ஞர்நல முப்போத நீரொப்பப் பொறப்பர்நட்பை
வல்லவை வல்லவ மூத்தோ ணடக்கவை யாபுரிவேள்
வெல்லுதல் போல்விலக் கேனேலென் கொங்கைபுண் வீக்கங்களே.

சரத்தைப்பொருகட் பரத்தைத்தலைவி
சீற்றந்தோன்ற வேற்றமுரைத்தது.

மெய்ப்பாடு—வெகுளி. பயன்—தனது பீடுணர்த்தல்.

## 22. நகைத்துரைத்தல்.

மலைசாய்க்கும் வேலர் பழனியெம் மூரற்கு மற்றொருத்தி
யிலைசா.........தாறுழை யென்பாண்முன் சாயை யிரவிவட்டங்
கலைசாய்க்குங் கோசிகன் கைவினை.........ந் காணுமெங்கை
தலைசாய்க்கு நாணு முலைசாய்க்கு மேயிடை தன்னையுமே. (373)

தலைவன்பிரியத் தாழ்குழற்பேதை
நலமுறுபரத்தையை நகைத்துரைத்தது.

மெய்ப்பாடு—வெகுளியைச்சார்ந்த அழுகை. பயன்—பரத்தையது சிறுமையுணர்த்துதல்.

## 23. நாணுதல்கண்டு மிகுத்துரைத்தல்.

மாடக வீக்க நெகிழ்த்துரை யிட்ட மகரநல்யாழ்
பீடக மேந்திய பெட்டியிற் பாம்பென்னப் பின்னையன்னு
ளாடக வோங்கல்செண் டாடிய வேலர்வை யாபுரிமன்
கூடக மோர்ந்தென்னை யெய்த்தொல்கி ஞள்கற்பின் கொள்கைநன்றே.

வெள்கக்கண்ட மெல்லியற்பாங்கி
கள்ளிளர்குழலிதன் கற்பினைப்புகழ்ந்தது.

மெய்ப்பாடு—அழுகை. பயன்—தலைமகளது பெருமையுணர்த்துதல்.

## 24. பாணன்வரவுரைத்தல்.

வேமபுர கருமபுண் பவன்றேடல் போனம்மில் வேந்தர்தங்கிப்
பாம்பும் புலியுங் கிடந்திடம் போற்செய்த பாங்கறியார்

தேம்பைங் கடம்பர் பழனிநல் லாயிசை தேர்மகளும்
போம்பண்பில் பாணனும் பூவாளம் பாடப் புகுந்தனரே. (375)

அரசனகன்ற தறியாப்பாணனைச்
சுரிகுழன்மாதர்க்குத் தோழிகாட்டியது.

மெய்ப்பாடு—அழுகை. பயன்—பாணனும் விறலியும் வரவுணர்த்திச் சிவப்பாற்றுவித்தல்.

## 25. தோழி யியற்பழித்துரைத்தல்.

குனிக்குங் கலாபர் பழனியன் ஞளின்பங் கொண்படுத்தி
நனிக்குங் குமப்புயம் வேற்றோர் மணந்திட நல்குமன்ன
ரினிக்கொம்பிற் றேன்வைத் துண் ணுதுபல் பூரக்கு மீத்திரட்குங்
கனிக்குங்கை வைத்திட்டுக் காய்கவர் வார்க்குங் கரிசொல்வரே. ()

சுடர்த்தொடிவாடத் தோழிநம்மன்ன
ரிடைத்தகவிலையென் றியற்பழித்துரைத்தது.

## 26. உழைய ரியற்பழித்துரைத்தல்.

செங்க மலங்கரு நாவற் கனிகொள்ளச் சென்றுசுரும்
பங்க மலங்கப் பெடையேங்கப் புல்குமவ் வூரன்செய்கை
துங்க மலங்கலில் வந்தோர் பழனியித் தோகைமையல்
பொங்க மலங்கன்னர் பால்வைக லாற்பெய் புயலொக்குமே. (377)

படையடுவேலோன் பரத்தையிற்பிரிதற்
குடைபடுமனத்தவட் குழையருரைத்தது.

இவையிரண்டிற்கும் மெய்ப்பாடு—அழுகையைச்சார்ந்த நகை. பயன்—தலைமகனை யியற்பழித்துத் தலைமகளை யாற்றுவித்தல்.

## 27. இயற்படவுரைத்தல்.

வையேந்து சத்தி வலத்தார் பழனியின் மாந்தழைமுன்
கையேந்தி வந்தவர் நீங்கார்நே நெஞ்சங் கனிந்துபுல்கி
மொய்யேந் தநிருத்தன் வாணன் மகளை முயங்கலொப்பார்
மெய்யேந்து நீழல்வெற் பேறினும் பீறினும் வேறல்லவே. (378)

உரவோற்பழித்த வுழையர்கேட்ப
விரவார்குழலி யியற்படவுரைத்தது.

மெய்ப்பாடு—பெருமிதம். பயன்—தலைமகனை யியற்படமொழிந் தாற்றுதல்.

## 28. நினைந்து வியந்துரைத்தல்.

அன்னைய ரெண்மர்க் கினியோர் பழனியி லன்னமிட்டாற்
பின்னவந் தென்னவுஞ் சுந்தரன் றேற்றபொன் பெற்றென்னவும்
பொன்னையன் றாளென் புலத்தாயி னானுன்னும் போதிலெல்லா
மென்னை வடிதட்டுந் தன்னை நருவுஞ்செய் தெய்தவனே. (379)

முலைவிலைப்பரத்தையை முயங்கிமேவினோ
னலர்குழற்பேதையை யகநினைந்துரைத்தது.

மெய்ப்பாடு—மருட்கை. பயன்—தலைமகன் பரத்தையினீங்கித் தலைமக ளிடத்தாறுதல்.

## 29. வாயில்பெறாது மகன்றிறநினைதல்.

பாலார் கரும்பைக் கரும்பீன்ற முத்தைப் பதுமத்தண்டைக்
காலானை யிங்கெய்தக் காணேன் பழனிக் கடம்பர்மயில்
போலாயி னாள்கனி வாய்மோன மாந்துணிப் பூட்டகற்றுங்
கோலாய்க்கொண் டுள்ளக் கதவே திறந்தின்பங் கொள்ளுதற்கே. ()

ஆயிழைமடந்தை யகன்கடைகுறுகியோன்
வாயில்பெறாது மகன்திறனினைந்தது.

மெய்ப்பாடு—அச்சம்* பயன்—வாயில்கோடல்.

## 30. வாயிற்கணின்று தோழிக்குரைத்தல்.

விருப்பாற் பசித்தயர்ந் தார்க்குநெய் யோடன்ன மெய்யிலப்பா
தொருப்பாட தாயன்ன மூட்டாரைப் போன்றுகொ லொன்றுமன்பிற்
றிருப்பார்வை நல்கியு நல்கார்குன் றெங்குஞ் சிறந்துகுடி
யிருப்பார் பழனியன் றார்க்கென்னை யான்செய்யு மேதங்களே. ()

மன்னவன்பின்னும் வாயில்பெறாதுநின்
றின்னகைப்பாங்கிக் கியம்புகின்றது.

மெய்ப்பாடும் பயனும் அது.

## 31. வாயில்வேண்டத் தோழிகூறல்.

பதஞ்சலி போற்புலிக் கான்முனி போற்செவி பாதங்கண்ணாய்
நிதஞ்சலி யாதிருட் பானாளெம் பாற்பண்டு நேர்ந்தவரின்

---

* 'அழுகை'யென்று திருக்கோவையாரில் காணப்படுகிறது.

றிதஞ்சலி யென்றும்பர் சூழ்வேள் பழனியில் யாரையுஞ்சேர்ந்
துதஞ்சலி யாக்குநர் பாற்கண்ண ளுவிரொவ் வோர்மனைக்கே. ()

ஆண்டகைவாயில் வேண்டிநிற்பக்
காண்டகுமடந்தை கையாறுரைத்தது.

மெய்ப்பாடு—வெகுளி. பயன்—வாயின்மறுத்தல்.

## 32. தோழி வாயில்வேண்டல்.

அயன்கங்கை யேந்திக் கருள்வேள் பழனியி லாற்றுதவப்
பயன்கங்கை யாட்ட வுளுவிருந் தாக்கப்பண் டியானைவென்றார்
நயன்கங்கை மீறத்தம் மாண்பின்றிக் காசி நகர்க்கிரையா
வியன்கங்கை போற்கடை வாளாநிற் பார்வந்து மெல்லியலே. (383)

வாங்குவில்வேந்தன் வாயில்பெறுமை
பாங்கிகண்டு பணிமொழிக்கிசைத்தது.

மெய்ப்பாடு—இளிவரல். பயன்—தலைமகளைச் சிவப்பாற்றுவித்தல்.

## 33. மனையவர் மகிழ்தல்.

எந்தா யயன்சிறை நீக்கென்ற நந்தியை யீங்கிவற்கு
மந்தா டளையிடு மென்றோர் பழனியி லம்மசெம்மல்
வந்தாரென் றோகை யுணர்த்தாமுன் னாதன் வம்பில்வெம்புஞ்
செந்தா மரைக்கண்ணர் போற்பொற்கண் சேந்தன சேயிழைக்கே.

திருந்திழைபார்வைச் சினக்குறிப்புணர்ந்த
பெருந்திறன்மனையவர் பேசலுற்றது.

மெய்ப்பாடு—அழுகை. பயன்—தலைமகள் வாயினேராமையுணர்த்துதல்.

## 34. வாயின்மறுத்துரைத்தல்.

காப்பொடு பத்தும் பயின்றினிக் கச்சுஞ் சுரிகையுஞ்செம்
மாப்பொ டசைக்குமிப் பார்மதி வாய்ந்தபின் மாதர்முன்னே
தேப்புன ஆரர்நம் வாயில்வந் தாற்செய்ய வேள்பழனிக்
கோப்பணி மாலவர் யான்சிதை சேயுங் குசலவரே. (385)

*மெய்ப்பாடு—வெகுளி. பயன்—வாயின்மறுத்தல்.

* கொளு வரையப்படவில்லை,

### 35. பாணனோடு வெகுளுதல்.

யாணர்நல் லூரருன் மீதன்ப ரென்பதென் வீணைவிள்ளும்
பாணநின் பொய்யினு மாங்கவர் மெய்யருட் பால்பெரிது
வாணநற் கீரற் கினியோர் பழனியில் வாய்கொடுக்குஞ்
சாணையில் வாட்பதம் பாராதி சாதியுண் சாதியனே. (386)

வாயில்வேண்டும் வண்ணயாழ்ப்பாணனை
வேயுறழ்தோளி வெகுண்டுரைத்தது.

மெய்ப்பாடும் பயனும் அது.

### 36. பாணன் புலத்தல்.

மல்லொன்று வேலர் பழனியெம் வள்ளிப் பிராட்டியொப்பாய்
சொல்லென்று கிள்ளைக்குச் சொன்னல தென்செயுஞ் சோர்பகலக்
கல்லென்ப தன்றிக்கல் பற்றேல்கை போறகண் சிவப்பக்கறேல்
செல்லென் றிடலன்றிச்செல்லென் றிடேல்செல்வன்செல்வனின்றே.

குவிமுலைகனன்று கூறத்தணித்துத்
திவவியாழ்ப்பாணன் செறலுற்றது.

மெய்ப்பாடு—†அழுகை. பயன்—சிவப்பாற்றுதல்.§

### 37. விருந்தோடுசெல்லத் தணிந்தமைகூறல்.

வில்லுமிழ் வேலர் பழனியில் வேந்தன்வந் தானென்னலும்
செல்லுறழ் கோதை திறத்துற்ற சீற்றம் விருந்தொடென்னச்
சொல்லுமுன் கொப்பரை வெப்புறு நீரிற் சொரிசிந்துபோன்
றொல்லைகண் வேலைப் பவளமுத் தோடு மொளித்தனவே. (388)

புனைகுழல்பரிசு மனையவர்மகிழ்ந்தது.

மெய்ப்பாடு—உவகை. பயன்—மகிழ்தல்.‡

### 38. ஊடறணிவித்தல்.

குன்றைத் துரந்து புரந்தோர்வை யாபுரிக் கோற்றொடிநின்
வென்றிக் குருளையைத் திண்சுவற் றூங்கி விழுத்துணையாய்

---

† திருக்கோவையாருள் அச்சம் என்றும். § சிவப்பாற்றுவித்தல் என்றும் உள்ளன. ‡ மெய்ம்மகிழ்தல் என்று திருக்கோவையாரில் காணப்படுகிறது.

மன்றப் புருகலின் மன்னற்கு நீமுக மன்புரிவாய்
கன்றைத் தழுவிமுன் செல்வோற் கிணங்குங் கபிலையுமே. (389)

தன்மகனொடுவருந் தார்வேந்தெனப்
பன்மலர்க்குழலியைப் பாங்கிதணித்தது.

மெய்ப்பாடு—பெருமிதம். பயன்—தலைமகளைச் சிவப்பாற்றுதல்.*

## 39. அணைந்தவழி யூடல்.

சடைத்திங்கட் பால னறியானென் றேகங்கை தான்புணரும்
விடைத்துங்கன் சேயர் பழனியின் னூர்வெகுள் வார்கையிற்சேய்
படைத்துங்கை பற்றியெங் காலம்மி சேர்த்த பழக்கங்கொண்டோ
கிடைத்தின்றுந் தீண்டினை வேண்டேமுன் னுணின்மைக் கேண்மைகளே. ( )

ஊடல்வேலோ னணைந்தவழியே
யூடலாக வொள்ளிழையுரைத்தது.

மெய்ப்பாடு—வெகுளி. பயன்—ஊடனீங்குதல்.

## 40. புனலாட்டுவித்தமைகூறிப் புலத்தல்.

ஒருத்தியைப் பூம்புன லாட்டிப் புணர்ந்தெமக் குள்ளமொளித்
தருத்தியொ டென்குறை தீர்ப்பா ரெனப்புகுந் தாசைசொல்வார்
மருத்திகழ் நீபர்வை யாபுரி யூரர்தம் வஞ்சமென்னுங்
கருத்தி லவல்வைத் தூல்வாய் குழிப்பது கண்டனமே. (391)

படிற்றுநிலையினர் பரிசினுக்கழுங்கி
விடுத்துரைத்தூடி மெல்லியல்புலந்தது

மெய்ப்பாடும் பயனும் அது.

## 41. கலவிகருதிப் புலவிபுகறல்.

மேகம் பருகிய வான்கட னீரைவெண் பஞ்சிநொய்தான்
மோகம் பிறந்து சுவைக்கவற் றேசண் முகர்பழனிப்
போகம் பகர்பெண்டி ருள்ளார்மன் றாநின் புயத்தினுக்கு
மாகந் தனக்குங் கருணைக்கும் யாங்க ளயலவரே. (392)

பூந்தண்சீறடி வேந்தன்றன்னொடு
கலவிகருதிப் புலவிபுகன்றது.

மெய்ப்பாடு—வெகுளி. பயன்—புலத்தல்.

---

* 'சிவப்பாற்றுவித்தல்' என்று திருக்கோவையாரிற் காணப்படுகிறது.

### 42. மிகுத்துரைத்தூடல்.

கருப்பமிர் தன்னசொற் சீர்'நாத விந்து கலாதி'யென்னுந்
திருப்புக ழோர்பழ னித்தேய மூர்குடி தேவர்க்கெய்தா
திருப்பதிம் மூன்று முயர்ந்தி ரிழிந்தவென் மேல்விழையும்
விருப்ப மிழுக்கமன் றோவட்டி லேற்குங்கொன் மேற்கட்டியே. (393)

ஏற்றநாடு ரில்லஞ்சுட்டி
வேற்றடங்கண்ணி மிகுத்துரைத்தது.

மெய்ப்பாடும் பயனும் அது.

### 43. ஊடனீட வாடியுரைத்தல்.

கொங்கர் பிரான்றெழுஞ் செவ்வேள் பழனியங் குன்றத்திம்மான்
பொங்கர்நின் றன்றிணைக் கண்ணுலெம் மாவி புரந்தவரு
ளிங்கரி தாவதுண் டோபனி யால்வளர் தெட்டியவேய்
செங்கதி ராலெட்டக் கிட்டா ததுமுண்டு தேர்நெஞ்சமே. (394)

ஏடலர்தாரோ னுடைமைத்தோளி
வாடலூட னீடவாடியது.

மெய்ப்பாடு—பெருமிதம். பயன்—தலைமகளைச் சிவப்பாற்றுதல்.*

### 44. துனியொழிந்துரைத்தல்.

ஒன்பது கோள்கண் மறுத்தாலுங் கோளத் தொண்முகில்பெய்
தன்புறு வான வரம்பனைக் காப்பதி லாளிபன்மா
மின்...லெற்பினுஞ் செவ்வேள் பழனியில் வேறுணையாய்த்
துன்பொழித் தின்பந்தந் தார்க்கோநிற் பேணித் துனிநிலையே. ()

திருத்தகுமூரன் வருத்தநோக்கிக்
கனிமொழிமடந்தை துனியொழிந்தது.

மெய்ப்பாடு—அழுகை.† பயன்—சிவப்பாற்றுதல்.

### 45. புதல்வன்மேல்வைத்துப் புலவிதீர்தல்.

திருடியும் பாவலர்க் கீவோரிற் சிறறவ்வை மார்க்கொளித்துன்
பொருடெரி யாமழ லைக்குவந் துந்தையெப் போதளித்தான்

---

* சிவப்பாற்றுவித்தல் என்று திருக்கோவையாரிற் காணப்படுகிறது.

† அச்சம் என்று திருக்கோவையாரிற் காணப்படுகிறது.

இருடியர் போற்*..........னியி லெசசமுணணத
தருதனித் தம்பல மன்றேமைந் தாதனந் தாரலமே. (396)

.........திருநகர்ப் புதல்வன்மேல்வைத்துக்
கலகவேல்விழியாள் புலவிநீங்கியது.

மெய்ப்பாடு—இளிவரலைச்சார்ந்த நகை. பயன்—ஊடனீங்கியது.

## 46. கலவியிடத்தூடல்.

விலைமாதர் மிச்சிலென் றாரனைச் சீறும் விறன்மிண்டர்போல்
முலைமான் முடிய முடியா லடிதொட்டு மோதுங்கையை
மலைமார்ப னெற்றுங்கை நோமுங்கை நோமென்ன வான்பழனிச்
சிலைமா னவர்படை யாற்கொங்கை வாசற் றெளித்தனளே. (397)

அஞ்சே......றடி யழுந்துமென்றேற்பவன்
றஞ்சங்கண்டு நெஞ்சந்தளர்ந்தது.

மெய்ப்பாடு—இளிவரலைச்சார்ந்த நகை. பயன்—ஊடனீங்குதல்.†

## 47. முன்னிகழ்வு...............

அடற்கெழு தாருகற் காய்ந்தோர் பழனியி லார்மறப்பா
ருடைக்கொடு.........மிசைந்ததும் பர்க்குமுண்டோ
முடக்குமத் தொற்றுயிற் சீறாத்தங் கற்...........
வடக்கொழும் பாசிலை வாழ்க்கைப்பொன் மார்பற்கும் வாய்ப்பரிதே.

......ச் சிந்தையிற்றோன்ற
மல்குசீரூரன் மெல்லியற்கிசைத்தது.

மெய்ப்பாடு—உவகை. பயன்—தலைமகளை மகிழ்வித்தல்

## 48. பரத்தையைக் கண்டமை பயன்படக்கூறல்.

வள்ளி.........முலை தோய்ந்தோர் பழனி மறுகின்மைந்தன்
துள்ளிமுத் தாடக்கண் டோர்மா தெடுத்தன்பு தோன்றமுகர்

---

* ஏட்டிற் சிதைந்த இடங்கள் புள்ளியிட்டுக் காட்டப்பட்டுள்ளன. முன்னும் பின்னும் புள்ளியிட்டனவும் அப்படியே.

† தலைமகளைச் சிவப்பாற்றுவித்தல் என்று திருக்கோவையாரிற் காணப்படுகிறது.

தள்ளிமுத் தாடியச் சோவச்சில் வார்த்தவக் காரவட்டோ
பிள்ளைமுத்தோவென் றுபின்பார்த்தென்பால்விட்டுப்பேர்ந்தனளே.

.........த்தையைத் தெருவிற்கண்டமை
யாரப்புயத்தவற் கறியவுரைத்தது.

மெய்ப்பாடு—நகை. பயன்—சிவப்பாறுதல்.*

## 49. ஊதிய மேடுத்துரைத் தூடறீர்த்தல்

திருமகள் சீர்மைக்குங் கல்விக்கு மாலயன் சேண்புலவோர்க்
கருண்மிகு மிந்திரன் பாணர்க்குக் கூடல்ராணிரவோர்க்
கிருதிதி வையா புரிக்கந்தர் தாட்கிரு வான்பொதியத்
தொருமுனி சுற்றமைந் திற்குமைந் தாருநம் மூரனுமே. (400)

வாயிலுள்ளவர்தா மன்னனைப்புகழ்ந்து
சேயிழையூடல் தீர்த்துவாழ்த்தியது.

மெய்ப்பாடு—உவகை. பயன்—தலைவனையும் தலைவியையும் மகிழ்வித்தல்.†

பழனிக்கோவை முற்றும்.

---

மாணிக்க வாசகர் வாய்மலர்ந் தன்றுமன் றடினர்மேற்
பேணிக் கோளச்சொன்ன கோவையி லேபற்றிப் பின்படர்ந்து
வேணிக்கங் காநதி யின்றேர் பழனிச்சேவ் வேள்தடம்புற்
பாணிக்கோள் வேலிற் படர்ந்திந்தக் கோவை பழுத்ததுவே.

இறையனார்பொருளுரையிலே வழங்கும் பழனிக்கோவை யெழுதி வளர்ந்தது.

T. K. இராமானுஜையங்கார்.
உதவிப்பத்திராசிரியர்.

---

* சிவப்பாற்றுதல் என்று திருக்கோவையாரிற் காணப்படுகிறது.
† மெய்ம்மகிழ்தல் என்று திருக்கோவையாரிற் காணப்படுகிறது.

தா(யா)ரா நகர வேந்தன் போஜதேவன் இயற்றிய

# ஸரஸ்வதீகண்டாபரணம்.

## (கலைமகள் கழுத்தணி)

[உசச-ஆம் பக்கத்தொடர்ச்சி.]

### 15. தேசியம்.

தத்³தே³ஶ்யமிதி நிர்தி³ஷ்டம் யத³வ்யுத்பத்திமத்பத³ம் ।

கல்லாதமக்களால் மட்டும் வழங்கப்படுவனவாகிய சொற்களை வழங்குதல் 'தேசியம்' என்னும் குற்றமாம்.

உதாரணம்:—

மஹல்லா லாவண்யாத் தஹல்லா தே பு⁴ஜலோஹலா ஸுபலோஹலா ஸுஜெளா ।
நேத்ரே ச்ச வோலட்டகேஹ்நோட்டே ஜோட்டாயி தலஸே ஸகி ॥

தோழியே! உன் கைகள் நீண்டவை; அழகுமிக்க எரிகளைப் போன்றவை; மிகவும் மிருதுவானவை. உன் கண்களோவெனில், நீலோற்பலம் போன்றவை; விலாஸம் பொருந்தியவை.

இங்குக்கண்ட அடைமொழிகள் கல்லாத பாமரர்களால் மட்டும் வழங்கப்படுவன. ஆகலால் தேசியம் என்னும் குற்றத்தின் பாற்பட்டன.

### 16. கிராமியம்.

அஶ்லீலாமங்க³லக்⁴ருணாவத³ர்த²ம் க்³ராம்யமுச்யதே ॥ ௧௪ ॥

அசிலீலம் (வெட்கத்தைத்தருவது), அமங்களம், அருவருப்பைத் தரத்தக்கது: ஆகிய மூன்றும் கிராமியம் என்னும் குற்றமாகக் கூறப்படும்.

## I. அசிலீலம்.

[illegible] ஸ்வார்த்தம் ஸ்வார்த்தாந்தர[illegible] ।
ஸ்ம்ருதிஹேதுஸ்ச த்ரிவித: பரிபட்யதே ॥ ௧௫ ॥

இவற்றுள் அசிலீலம் என்பது, இடக்கர்ப்பொருளொன்றே யுடையதென்றும், வேறுபொருளுடன் இடக்கர்ப்பொருளையு முணர்த்துவதென்றும், இடக்கர்ப்பொருளை நினைக்கச்செய்வதென்றும் மூன்றுவகையாகக் கூறப்பட்டது.

1 அவற்றுள் இடக்கர்ப்போருளேயுடைய அசிலீலத்திற்கு உதாரணம்:—

[illegible]

இதிற் புணர்ச்சி குறிக்கப்படுதலால் இது இடக்கர்ப்பொருளேயுடைய அசிலீலமென்னும் குற்றமாயிற்று.

2. வேறொருபொருளில் வழங்கப்பட்டிருந்தும் இடக்கர்ப் பொருளையும் உடையதாய்வரும் அசிலீலத்திற்கு உதாரணம்:—

வித்யாஸித்த்யஸ்ய தே ராத்ரௌ வேதியா யக்ஷத: ப்ரியா ।
வனிதா குஹ்யகேசானாம் கதம் தே வைபவம் ந ஹி ॥

இரவில் மந்திரங்களை ஓதி உருவெண்ணுகின்ற உன்னுடைய பிரியதேவதையான 'யக்ஷிணி' வருகிறாள்; உனக்குப் பொருட் குறைவும் உண்டோ?

இங்கு, 'யா, ஸவத:' என்ற தொடர், 'யாஸ' எனவும் பிரிந்து இடக்கர்ப்பொருள்தோன்ற நின்றது. [யாஸ=புணர்ச்சி.] 'ஶேபஸ்ய கேஶ' என்னும் தொடர், 'ஶேபஸ்ய' 'கேஶ' எனவும் பிரிந்து இடக்கர்ப்பொருள்தோன்றநின்றது. [ஶேபஸ் - பெண்குறி. கேஶ - மயிர்.] 'வெமுவம்யநம்' என்னும் தொடர் 'வெமு' எனவும் பிரிந்து அண்டம் என்னும் இடக்கர்ப்பொருளுணரநின்றது.

3. இடக்கரை நினைக்கச்செய்யும் அசிலீலத்திற்கு உதாரணம்:—

உத்தம்ஸயஸி ஶாகம் வ்ருத விகவாகாடவெந கிம்।
க்ரூதம் க்ருகாடிகாயாம்தெ வாத: ப்ராணெந யாஸ்யதா॥

ஓ! மாமரமே! குயில்களின் கடியகுரலால் என்னை ஏன் அச்சுறுத்துகின்றாய்? உன் கழுத்தில் கால்களை வைத்து (மிதித்து) என் உயிர்கள் முன்னமே போய்விட்டனவே! ஆதலால், உன் முயற்சி வீணே!

இங்கே, 'காடவ' 'க்ருகாடிகா' எனும் சொற்கள் இடக்கர்ப்பொருளை நினைப்பூட்டுகின்றன.

II. அமங்களம்.

ஶாகெஷு யடிஶஷாய-ஶெஷாய-ாதொம வயஜ।
அஶஷ்ஷ்ய திஹெத-ஶாஶமஶாய-ம் த்ரியெவ தஜ॥ ௧௬॥

அமங்களம் என்பது, அமங்களமாகிய பொருளேயுடையதும், வேறுபொருளோடு அமங்களமாகியபொருளையும் உடன்கொண்டதும், அமங்களமாகியபொருளை நினைப்பூட்டுவதும் என மூன்றுவகைப்படும்.

1 அமங்களப்பொருளுடையதற்கு உதாரணம்:—

வெடகெ ஸக்ஷஸெவஸ்ய வஶஸ்ரா: வத்நஸ்ய॥
ஶத்ரொZஸம் ஶிஷ்யாதி ஹெஹெ ஸாஷிதஸ்ய॥

தோழி! சிற்றூரில் விளைந்த பருப்பினாலும், கிராமத்தின் ஒருபகுதியில் குடியிருப்பதாலும், உன் வார்த்தைகளாலும் திருப்தி யடையாத நான் இறந்துவிடுவேன்.

இங்கு, இறந்துவிடுவேன் என்று கூறியது அமங்களமாயுள்ளது.

2 வேறு பொருளோடு அமங்களப்பொருளையும் உடையதற்கு உதாரணம்:—

ப்ரவாஸயதி யா காந்தம் வஸந்தே க்ருஹஸம்ஸ்திதம் ।
விநாஶயஷாநேந விஶாஷீ ஸா நவாங்கநா ॥

வசந்தகாலத்தில் வீட்டிலிருக்கும் நாயகனைத் திட்டாமலே (தன் நடத்தையாலே) வீட்டிலிருந்து துரத்துகிறவள் பெண்ணல்லள்; பேயே.

இங்கே, 'ப்ரவாஸயதி' 'ஸம்ஸ்திதம்' 'விநாஶ' 'விஶாஷீ' எனும் சொற்கள், முறையே, உச்சாடனஞ்செய்தல், இறத்தல், நாசம், புலாலுண்பவள்: எனும் அமங்கலப்பொருளையும் உணர்த்துவனவாயுள்ளன.

3 அமங்களப்பொருளை நினைப்பூட்டுவதற்கு உதாரணம்:—

மாரீசோத்பந்நதநயோ க்ருதாந்தாः காலதண்டகாஜயே ।
வந்த்யாம் ஸங்க்ரந்தநாதீநாம் ஸந்தாநாநாம்விதேஶவத் ॥

மரீசியின்புதல்வரான காசியபர், ஸங்கிரந்தனர் முதலிய பன்னிரண்டு ஆதித்தியர்களை மக்களாகப் பெற்றார்; சிவபிரானைக் கோயிலில் வழிபட்டதால் அவருக்கு அந்தப்பேறு கிடைத்தது.

இங்கே, மாரீச என்பது கொலைக்களத்தையும், க்ருதாந்த என்பது பேயையும், கால, தண்ட என்பன யமனையும், ஸங்க்ரந்த என்பது மிகுதியாகக்கூக்குரலிடுதலையும் உணர்த்தி அமங்கலப்பொருளை நினைப்பூட்டியவாறு காண்க.

## III. அருவருப்பைத் தரத்தக்கது.

வடிஙெயூம் வ்ருணாவஹம் யடிாஹாய௴ாஷுஸ்ம்வுயது ।
வ்ருணாவஸ்ப்ரதிஹெதாலய௴தடிவ்ருணாவஹிஹதிுயா ॥ கள ॥

அது, அருவருப்பைத்தரத்தக்கபொருளையே உணர்த்துவதும், மற்றொருபொருளோடு அருவருக்கத்தக்கபொருளையும் உணர்த்துவதும், அருவருக்கத்தக்கபொருளை நினைவுறுத்துவதும் என மூன்றுவகைப்படும்.

1. அருவருப்பைத்தரத்தக்கபொருளையே உணர்த்துவதற்கு உதாரணம்:—

வடி௴தெ ஹாடிதெ ஸ்தந்ய்ம் வஜெத்ருஷ ஸ்தந்ய்யஃ ।
வாநாலதெக்ஷதி நிஷ்டீவத்ருாத்தமஹா௴ாவா நவ௴ய௵ஃ ॥

கருப்பமுற்றவளுடைய முலைப்பாலையருந்தியதால் இந்தக் குழந்தை வயிற்றிரைச்சலுண்டாகப்பெற்றிருக்கிறது; அடிக்கடி (பாலைக்) கக்குகிறது; கருப்பிணியோ அடிக்கடி துப்புகிறாள்; ஓலமிடுகிறாள்.

இங்கே கூறப்பட்ட சொற்கள் அருவருப்பானபொருளுடையனவாதல் காண்க.

2. மற்றொருபொருளோடு அருவருக்கத்தக்கபொருளையும் உணர்த்துவதற்கு உதாரணம்:—

ஶாஷ்வ க்ஷுணாவிஜெளமஜ்ஜள விவ௵யாவாஜ்ஜொஉளதவ ।
ஹ்ரியொஜெ விஷ்டிதஃ வாதி! ஷ்டிதவலெ௴ாஹிரவ௴தி ॥

ஓ புதல்வியே! காதலன் உன்முன்னே நின்றுகொண்டு தன் புன்சிறிப்பின் காந்திகளால், கண்ணீரால் நனைக்கப்பட்ட உன் கன்னங்களை அருச்சிக்கின்றான்.

இங்கே, விபாடிய, விஷித, வஷ்டிஸ் என்னும் சொற்கள் வேறுபொருளுணர்த்துவதோடு, முறையே சீழ், மலங்கழிதல், மலம்—என்னும் அருவருக்கத்தக்க பொருளையும் உணர்த்துவன வாய்நின்றமை காண்க.

3· அருவருப்பைநினைவுறுத்துவதற்கு உதாரணம்:—

ஸ்ப்ருஷ்டா த்ருமா: ஸ்மரபாணாநி கா3த்ரேஷு வ்ரணாநி ந: ।
நூதநம் குர்வந்த்யேதே புரீஷணஸஹோத்ராணா: ॥

இவ்வூரில் நெருங்கி ஒன்றுக்கொன்று பின்னிக்கொண்டு வளர்கிற மரங்கள், எங்களுடைய மேனிகளில் மன்மதபாணங்கள்பட்டு உண்டான புண்களை மறுபடியும் புதியனவாகச்செய்வனபோலும்.

இதில், 'புரீஷம்ஸஹோத்ராணா:' எனும் தொடரிலுள்ள புரீஷம் என்னும் பகுதி மலம் எனும் பொருளுடையதாய் அருவருப்பை நினைவுறுத்துகின்றது.

இனி, நூலாசிரியர் வசனத்தின்பாற்பட்ட குற்றங்களை விளக்குகின்றார்.

[தொடரும்.]

V. S. ராமஸ்வாமிசாஸ்திரி, B A., B L.,

மதுரை.

ஸ்ரீ:

# வான்மீகரும் தமிழும்.

[உ௮௦-ஆம் பக்கத் தொடர்ச்சி.]

## VII மாநுஷபாஷை தமிழ் என்பதற்குப் பிறசான்றுகள்

### 1. கம்பராமாயணம்.

வான்மீகத்திலுள்ள பலகுறிப்புக்களால் இராமாயணகாலத்தில் இமயந்தொடங்கி இலங்கையளவான நாடுகளிலுள்ளோரெல்லோருக்கும் தாய்மொழி தமிழாயிருந்ததென்று கருதப்படுகிறது. இக்கருத்தைக் கம்பராமாயணத்துள்ளும் காணலாம்.

கல்வியிற்சிறந்த கம்பநாடர் வான்மீகிபகவான்வாக்கின் சொற்பொருணயங்களை நோக்கி,

> "நொய்தின் நொய்யசொல் நூற்கலுற்றேனெனை
> வைத வைவின் மராமர மேழ்தொளை
> யெய்த வெய்தவற் கெய்திய மாக்கதை
> செய்த செய்தவன் சொல்நின்ற தேயத்தே"*

என்றார். இங்கு ஈற்றடியைச் 'செய்த செய்தவன் செய்யுளின் முன்னரோ' என்று மோனைநயம்பெறக் கூறலையும் விடுத்துச் 'சொல் நின்ற தேயத்தே' என்றமையால், கம்பர் வான்மீகிபகவான் சொல்லும் சொற்களின் பொருட்பெருக்க முதலியவற்றை நினைந்து வியந்துள்ளார்: என்று அறியலாம்.

இதுவேயுமன்றி, அநுமான்பேச்சைப்பற்றியும், இராமன் வாயாலே, கம்பர், 'யார்கொல் இச் சொல்லின்செல்வன், ............ விரிஞ்சனோ விடைவலானோ'† என்று வியந்து புகழ்ந்துள்ளார்.

அவ் வான்மீகிபகவான்பேச்சும் அநுமான்பேச்சும் சேர்ந்து ஒன்றாகநிற்கும் நிலையில் (-வான்மீகிபகவான் அநுமான்வாயாலே பேசும் பேச்சில்) தமிழ்மொழிக்கு மாநுஷம் என்று ஒருபெயர்

---

* கம்பராமாயணம். பாயிரம். செய். 5.

† கிஷ்கிந்தாகாண்டம் அநுமப்படலம். செய். 20.

வழங்கப்பட்டது. இப்பெயர் எவ்வளவு பொருளடக்கமுடையதா யிருக்கவேண்டுமென்பதை அக் கம்பநாடரே அறிந்தவராவர். அவர் அறிந்துசொல்லிய சில குறிப்புக்களால் தமிழைப்பற்றிய மிகப்பழமையான சரித்திரம் சிறிது ஒருவாறு அறியத்தகும். அவற்றுள்,

(முதலாவது குறிப்பு.)

ஆரணியகாண்டத்துள், இராமன் அகஸ்தியாச்சிரமம் செல்வுழி, அகஸ்தியரது சிறப்புரைப்பாராகி, கம்பர், அவ் வகஸ்தியரை,

'என்றுமுள தென்றமிழ் இயம்பி இசைகொண்டான்'§

என்றார்.

இதனுள், தமிழை 'என்றுமுள்ளது' என்றதற்குக்காரணம், வான்மீகிபகவான் அநுமான்வாயால் தமிழை 'மாநுஷீவாக்'என்றும், 'மாநுஷம்வாக்யம்' என்றும் சொல்லியிருப்பதேயாம்.

மாநுஷீவாக் என்பதற்கும் மாநுஷம்வாக்யம் என்பதற்கும் வடமொழியிற் சொற்பற்றிசிற்கும் பால்வேற்றுமையல்லது பொருள்பற்றிய வேற்றுமை சிறிதுமில்லை.

மாநுஷீ என்பதும் மாநுஷம் என்பதும் (மானிடருடையது என்னும்) ஒருபொருளுடையனவாம். வாக் எனினும், வாக்யம் எனினும், பாஷையெனினும் ஒக்கும். எனவே, மாநுஷீவாக், மாநுஷம் வாக்யம் என்னும் இரண்டும் மானிடருடைய பாஷை என்னும் ஒரேபொருளுடையனவென்பது போதரும்.

மானிடருடையபாஷை யென்பதில் உடைமைப்பொருள் இரண்டுவகைப்படும். அவை * தற்கிழமைப்பொருளும் †பிறிதின் கிழமைப்பொருளுமாம்.

பாஷையைப் பேசுவோராகிய மானிடர்க்கு அவர்பேசும் பேச்சாகிய பாஷை தற்கிழமைப்பொருளாம். இது உடலின்கண்

§ ஆரணியகாண்டம். அகத்தியப்படலம். செய். 47.

* தற்கிழமை—சமவாயசம்பந்தம்.

† பிறிதின்கிழமை—ஸம்யோகஸம்பந்தம்.

உறுப்புக்கள்போல் ஒற்றுமைச்சம்பந்தம்பற்றிநிற்பது. இதற்கு உதாரணம்: சம்பந்தர்பாடியபாட்டைச் சம்பந்தர்பாட்டு என்பது போல்வது.

பிறிதின்கிழமைப்பொருள்: உடலின்கண் உள்ள ஆடை அணிகலன்கள்போல வேற்றுமைச்சம்பந்தம்பற்றி நிற்பது. இப் பிறிதின்கிழமையான பேச்சுக்கு உதாரணம்: ஒருபுலவன் சம்பந்தர் விஷயமாகப் பாடிய பிள்ளைத்தமிழைச் சம்பந்தர்பிள்ளைத்தமிழ் என்பதுபோல்வது.

இவ்வாறு மானிடர்விஷயமான பாஷையென்பதற்கிடமில்லாமல் மானிடர்பேசும்பாஷை என்னும் பொருளில் மாநுஷீவாக் என்றும், மாநுஷம்வாக்யம் என்றும் வழங்கப்பட்டிருப்பதால் அப்பெயர்களுடையபாஷை மானிடர்க்குத் தற்கிழமைப்பொருளேயாம்.

தற்கிழமைப்பொருளோ சினையும் முதலும், வினையும் வினைமுதலும்போல் ஒன்றைவிட்டொன்று பிரியாது ஒன்றுபட்டிருப்பதே. இதனால், மாநுஷபாஷையென்னும் தமிழ்ப்பாஷை, வினையும் வினைமுதலும்போல் மானிடரைவிட்டுப்பிரியாத ஒன்றுபட்ட சம்பந்தமுடையதென்பது பொருட்குறிப்பாற் பெறப்பட்டது.

உலகத்துள்ள பாஷைகள் இயற்கையாயும் செயற்கையாயும் இரண்டுவகைப்பட்டிருக்கும்.

கிளி நாகணவாய் முதலிய பறவைகளுக்குப் பிறப்புரிமையாயுள்ள ஒலிக்குறிப்புக்கள் அவற்றிற்கு இயற்கையாயுள்ள பாஷைகளாம்; பின்பு அப்பறவைகளை வளர்க்கும் மானிடர் அவற்றிற்குப் பயில்விக்கும் தமிழ்மொழி முதலிய பாஷைகள் அவற்றிற்குச் செயற்கையாயுள்ள பாஷைகளாம்.

அவ்வாறே மானிடர்க்கும் பிறப்புரிமையாயுள்ள பாஷை ஒன்று இருக்கவேண்டுமன்றே! அது தமிழ்மொழியென்றும், பின்பு செயற்கையாயுள்ளபாஷை தேவபாஷை முதலிய பிறமொழியென்றும் கொள்ளத்தகும்.

இக்கருத்துக்கொண்டே இயற்கையானமைந்த தம்மொழியென்னும் பொருள்தோன்ற, மாநுஷபாஷையின் ஒருபகுதிக்கு இயற்றமிழ் என்று பெயரிட்டு வழங்குவதும் நோக்கத்தக்கது.

இவ்வாறாக, மானிடர்களுக்கு இன்றியமையாத உறுப்புக்கள் போலத் தமிழ்மொழியும் அவருடன் ஒற்றுமைச்சம்பந்தமுடைய தாய் ஊழிதோறூழி தப்பாமே தோன்றிவருமாதலால் அது என்றும் உளதாம் என்று பெறப்பட்டது.

மானிடவடிவம் பிறந்திறந்து அழிந்துபடுதலால் அநித்தியமானாலும், மானிடத்தன்மையாகிய ஜாதி நித்தியமாயுள்ளதென்பது தருக்கநூற்றுணிபு.

ஜாதி நித்தியமாகவே அச்சாதி புலப்படுதற்குரிய உறுப்பின் கூட்டத்தொகுதியின் தோற்றம் ஊழிதோறூழி மாறுபடாது ஒருபடியே மானிடர்க்குரிய கை கால் தலை செவி முகம் முதலியன பிறழாது அமைவதுபோல, இயல்பாகவே அவர்பேசுதற்குரிய பாஷையும் பிறழாது தமிழாகவே அமையும் என்பதாம்.

இதனால், மானிடர்தோன்றும் காலங்களிலெல்லாம் தமிழ்மொழி தப்பாமேதோன்றும் என்னும் கருத்தால் 'என்றுமுள தென்றமிழ்' என்றார்.

(இரண்டாவது குறிப்பு.)

என்றுமுளது என்றமையாலே தமிழ்க்குக் காலவரையறையில்லை என்றதனோடமையாது, அது தேசவரையறையும் இல்லாமலிருந்தது என்னும் கருத்தால்

'நீண்டதமிழால் உலகை நேமியின் அளந்தான்'*

என்றார்.

இதன்பொருள்:—அகஸ்தியமுனிவர் வாமனாவதாரரூபியான திருமால்போலக் குறுமுனியாயிருந்துகொண்டே அத்திருமால் நீண்ட பாதங்களிரண்டாலும் உலகங்களை அடக்கியளந்தது போலத் தமக்கு அகத்துறுப்பாகி நீண்ட உலகவழக்கு செய்யுள் வழக்கு என்னும் இரண்டுபாதங்களால், உலகிலுள்ள பொருள்களையெல்லாம் அடக்கியளந்தார் என்பது.

---

* ஆரணியகாண்டம், அகத்தியப்படலம், செய். 36.

இங்கு வான்மீகிமுனிவர் அனுமான் வாயாற்கூறிய, "வாசஞ் சோதாஹரிஷ்யாமி மாநுஷீமிஹஸம்ஸ்கிருதாம்" என்ற செய்யுள்வழக்கையும், "அவச்யமபிவக்தவ்யம் மாநுஷம் வாக்யம் அர்த்தவத்" என்ற உலகவழக்கையும் அகஸ்தியரின் அகத்துறப்பான இரண்டு பாதங்களாகக்கொண்டு பொருள்சொல்லுமாறு நேமியோனை உவமித்திருப்பதும் நோக்கத்தக்கது.

இங்ஙனம் தமிழ்மொழி உலகமுழுதும் பரவியிருந்ததென்பது மிகப் பழையகாலநிகழ்ச்சியென்னும் கருத்தால் நீண்டதமிழ் என இறந்தகாலவினையாற் கூறினர்.

(மூன்றாவது குறிப்பு.)

படைப்புக்காலந்தொடங்கி உலகமுழுதும் பரவிச்சென்ற தமிழ், இராமாயணகாலத்திலும் வடநாட்டில் வழங்காமற்போகவில்லையென்று தோன்றுகிறது.

இதனை இராமன் நாடிழந்து காடடையநேர்ந்ததுகண்டு சினங்கொண்டுநின்ற இலக்குவனைச் சினமாற்றுகின்ற இராமனைப் பேசுமிடத்தில், கம்பர்,

*"நன்சொற்கடந்தான் டெனைநாளும் வளர்த்ததாதை
தன்சொற்கடந்தெற் கரசாள்வது தக்கதன்றால்
என்சொற்கடந்தா லுனக்கியா துளதீனமென்றான்
தென்சொற்கடந்தான் வடசொற்கலைக் கெல்லைதேர்ந்தான்"

என்றார்.

இதனுள், தென்சொல் எனச்சொற்பற்றிக் கூறியதனால் தமிழ் அக்காலத்தும் உலகவழக்காயுள்ள பாஷை என்பது பெறப்பட்டது. வடசொற்கலை எனக் கலைபற்றிக் கூறியதனால் வடமொழி நூல்வழக்காகவே அக்காலத்தும் இருந்ததென்பது பெறப்பட்டது. தென்சொற்கடந்தான் என்றதனால் இராமன் மாநுஷபாஷையான தமிழை முற்றக்கற்றவனென்றும், வடசொற்கலைக் கெல்லைதேர்ந்தான் என்றதனால் தேவபாஷையான ஸம்ஸ்கிருதநூல்களை முழுதும் உணர்ந்தவனென்றும் வெளிப்படக்கூறிவிட்டார்.

* அயோத்தியாகாண்டம். நகர்நீங்குபடலம். செய். 140.

இதனால் இலக்குவன் சினந்தணிந்து தெளியுமாறு தென் சொல்லால் உலகவழக்கான லௌகிகவியவகாரங்களாலும், வட நூல்கொண்டு வைதிகவியவஹாரங்களான தர்மநிரூபணங்களாலும் பேசும் சொல்வன்மையுடையவன் இராமன் என்றவாறாயிற்று.

இதற்கு இவ்வாறு பொருள்கூறாது, தென்சொற்கள் தந்தான் எனப் பிரித்து, 'இனியசொற்களை வழங்கினான்' எனப் பொருள் கூறின், தென்சொல் வடசொல் எனத் திசைப்பொருளும் அகப் படக் கூறியிருக்கும் சொற்பொருண்முரணாகிய செய்யுளழகழிவது மன்றி,'என்றான்' என மூன்றுமடியின் முற்றிநின்ற முற்றுச்சொல்லை யாதொருபயனுமின்றி எச்சச்சொல்லாக்கி யிடர்ப்படுவதோடு, எடுத்துக்கொண்டபொருளை முடித்தற்குரியதாயிருக்கும் ஏதுவை யும் இழந்து, பெயரடுக்கழகையும் கெடுத்தலால் அது கம்பர்கருத் தாகாதென்க.

(நான்காவது குறிப்பு.)

இங்கு, கம்பர் இராமனைத் தமிழ்கற்றவன் என்றமையால் அவனைக் கற்பித்த வசிட்டரும் தமிழ்கற்றவராவர். ஒருவருக்கு இரண்டுபாஷைப் பயிற்சி சொல்லப்பட்டமையால் அவற்றுள் தென் சொல்லாகிய தமிழ் மாநுஷபாஷையான தாய்மொழியாயும், வட சொல்லாகிய ஸம்ஸ்கிருதம் வந்தேறியான சாஸ்திரபாஷையாயும் அக்காலத்திலும் அங்கும் இருந்தனவென்று அறியத்தகும்.

தென்சொல் வடசொல் என்பவற்றின் திசைப்பெயராகிய அடைமொழிகள் இங்குக் கூறிய கொள்கையின் மறுப்பிற்கு உரியனபோலத் தோன்றலாம். அவை அங்ஙனம் ஆகாவென்பது பின்பு ஆராய்ந்துகாட்டப்படும்.

(ஐந்தாவது குறிப்பு.)

இனி, கம்பர் தம் வாயாலே இராமனைத் தமிழன் என்று காட்டியதோடமையாது, அவனுக்குக் குலமுதல்வனான இக்ஷ்வாகு வும் தமிழன் என்பது தோன்ற, விசுவாமித்திரன்வாயாலே,

'பிணியரங்க வினையகலப் பெருங்காலந் தவம்பேணி
மணியரங்க நெடுமுடியாய் மலரயனை வழிபட்டுப்

'பணியரங்கப் பெரும்பாயற் பாஞ்சுடரை யாங்காண
அணியாங்கந் தந்தானை யறியாதார் அறியாதார்'*

என்கிறார்.

இதனுள், இக்காலத்தும் தமிழ்நாடாகவேயுள்ள சோழவள நாட்டில் திருவரங்கமென்னும் திவ்யக்ஷேத்திரத்தில் இராமனுக்குக் குலமுதல்வனான இக்ஷ்வாகு என்னும் அரசன், ப்ரும்மதேவனை வழிபட்டுப் பாம்பணைப்பரஞ்சுடரைப்பெற்றுப் பிரதிஷ்டைசெய்தவன் என்றமையால், அவன் காவிரிநாடுடைய தமிழராகிய சோழர் குலமுதலாயுள்ளான் என்று குறிப்பாற் சொல்லியவாறாயிற்று.

(ஆறாவது குறிப்பு.)

இன்னும், கம்பநாடர் வசிட்டர்வாயால் இராமனைநோக்கி,

'அன்றயன் உலகினை யளிக்க வாகிய
உன்றனிக் குலமுத லுள்ள வேந்தர்கள்
இன்றள வினுமுறை யிகந்து ளாரிலை'†

என்றார்.

இதனால் படைப்புக்காலந்தொடங்கிவருவதாயுள்ளது இராமனுடைய குடிப்பிறப்பு என்று சொல்லப்பட்டது.

இந்த வரலாறுகொண்டே பரிமேலழகரும், குடிமையென்னும் அதிகாரத்துள், 'பழங்குடி பண்பிற் றலைப்பிரித லின்று' என்பதில் 'பழங்குடி' என்பதற்குத் 'தொன்றுதொட்டுவருகின்ற குடி' என்று உரையெழுதிவிட்டு, விசேடவுரையில், 'தொன்றுதொட்டுவருதல்—சேர சோழ பாண்டியர் என்றாற்போலப் படைப்புக்காலந்தொடங்கி மேம்பட்டுவருதல்' என்றார்.

இதனாலும்; 'சோழர்குடி படைப்புக்காலந்தொட்டு மேம்பட்டு வரும் குடி' என்று இக்ஷ்வாகுகுலத்தைக் கூறினாராயிற்று.

---

* பாலகாண்டம். குலமுறைகிளத்துபடலம். செய். 2.

† அயோத்தியாகாண்டம். கைகேயிசூழ்வினைப்படலம். செய். 122.

இந்த இக்ஷ்வாகுவின் குலமுதல்வனான மனுவை மனுச்சோழனென்றும் அவன் மனுமுறைகண்டவனென்றும் தமிழ்நாட்டரசனென்றும் பெரியபுராணம் கூறுகிறது. இது தவறுகுமாயின், மனு, இக்ஷ்வாகு முதலிய சூரியகுலத்தரசர்களுள் முற்பட்டவர் இருந்த ஊர் நாடு முதலிய விவரங்கள் வேறாக வெளிப்பட்டிருக்கவேண்டும். அங்ஙனமில்லாமையால் அவரைத் தமிழர் எனக் கொள்ளத் தடையென்னை.

(ஏழாவது குறிப்பு.)

மேலும், இராமன் முடிசூடற்சிறப்புச்சொல்லுமிடத்துக் கம்பர்,

'.........................வெண்ணையூர்ச் சடையன் றன்ன
மரபுளோர் கொடுக்க வாங்கி வசிட்டனே புனைந்தான் மௌலி'*

என்றார்.

இதனால் அயோத்திநகரத்தவரான சூரியகுலத்தரசரது அணிகலம் நிறைந்த மணிமுடிக்கோயிலின் முத்திரைக்கருத்தராயும் அமைச்சுரிமையுடையராயும் இருந்தவர்கள் வெண்ணைச்சடையவள்ளலின் மரபின் முன்னையோர் என்றமையால் அங்கிருந்த சுமந்திரன் முதலான மந்திரக்கிழவரும் தமிழர் என்பது கண்கூடாயிற்று.

இதனாலும் அக்காலத்தில் தமிழர் வடநாட்டிலும் இருந்தார்கள் என்று அறியத்தக்கதாயிற்று.

சோழவரசரின் பூர்விகரும் வெண்ணைச்சடையவள்ளலின் பூர்விகரும் வடநாட்டினின்றும் தென்னாட்டுக்கு வந்தவர்கள் எனக்கொள்ளில் இக்காலத்து ஆராய்ச்சியாளர் கருத்துப்படி அவர் தமிழராகாது ஆரியராகவேண்டும்.

கம்பர் அவரை அங்ஙனங் கருதாது, தென்னாட்டினின்றும் வடநாடுசென்ற தமிழராகவே கருதுகின்றனர். இதனைப் பின்வருமவற்றால் அறியலாம்.

---

* யுத்தகாண்டம். திருமுடிசூட்டுபடலம். செய். 38.

(எட்டாவது குறிப்பு.)

மஹாகவிகளாயுள்ளவர்கள் தம் காவியநாயகனுடைய தசாங்கத்தைச்சேர்ந்த நாடு யாறு முதலியவற்றிற்கு உவமைகூறுமிடத்து அவற்றினும் மிகச்சிறந்தவற்றைக்கொண்டு உவமிப்பதல்லது சிறிதளவேனும் தாழ்ந்தபொருளைக்கொண்டு உவமிக்கக் கனவிலும் கருதார்.

கம்பர் இராமனைக் 'கங்கைத்தீம்புனல்நாடன்'* என்றும், 'கோசல நாடுடைவள்ளல்'† என்றும், அவனுக்குரிய யாறும் நாடும் கொண்டு சிறப்பித்துள்ளார்.

அந்தக் கங்கையாற்றிற்கும் கோசலநாட்டுக்கும் நூற்றிலொரு பங்கும் ஆற்றாத காவிரியாற்றையும் சோழவளநாட்டையும் கங்கையாற்றிற்கும் கோசலநாட்டிற்கும் உவமமாக வைத்து, 'காவிரிநாடன்ன கழனி நாடொரீஇ'‡ என்கிறார்.

இது காவியமரியாதையினின்று நழுவிய மரபுவழுவாகும். இவ்வழு, கம்பர்கவிக்கு வாராமற் காக்கத் தக்க காரணம் இருக்க வேண்டும். அக்காரணம் யாதெனில், கங்கைநாடும் காவிரிநாடும் அக்குலத்தவர்க் குரியனவாகவேண்டும். அவற்றுள், கங்கைநாட்டினும் காவிரிநாடு அவர்க்கு மிக்க உரிமையுடையதாயிருப்பின் அதனைக் கங்கைநாட்டிற்கு உவமைகூறுதல் பொருந்தும். அல்லாக்கால் பொருந்தாது.

காவிரிநாடு தொன்றுதொட்டுவந்த இயற்கையுரிமையுடையதாயும், கங்கைநாடு இடையே வந்தேறியான செயற்கையுரிமையுடையதாயும் உள்ளன என்பதும், அதனால் அவர்க்குக் கங்கைநாட்டினும் காவிரிநாடே சிறந்ததாம் என்பதும் கருத்தாகவேண்டும். அதனால் இது குற்றமுடையதாகாதென்பது கம்பர் கருத்தென்று தோன்றுகிறது.

---

* பாலகாண்டம். தாடகைவதைப்படலம். செய். 68.

† யுத்தகாண்டம். முதற்போர்ப்படலம். செய். 256.

‡ அயோத்தியாகாண்டம். குகப்படலம். செய். 1.

இங்கு இவன்முன்னோர் காவிரிநாடொரீஇ வடதிசைசென்று நாடுகொண்டதன்மறுதலையாய் இவன் கங்கைநாடொரீஇத் தென்றிசைசென்று நாடுகொள்வானாயினான் என்னும் குறிப்பால் இராமாயணகாலத்தின்முன்னும் மனுமரபினராகிய தமிழ அரசர்கள் வடநாடுகொண்டனர் என்பது வெளியாகிறது.

அங்ஙனமாகில், திருவரங்கப்பெருமான் அயோத்தியரசரால் குலதெய்வமாகக்கொண்டு ஆராதிக்கப்பெற்றிருந்து, பின்பு இராமனால் விபீஷணனுக்குக் கொடுக்கப்பெற்று, விபீஷணன் இலங்கை நோக்கிச் செல்லுமிடையே திருவரங்கத்தில் பிரதிஷ்டிதரானார்: என்ற ஐதிகம் பொருந்துமாறு எங்ஙனமெனில், இக்ஷ்வாகுகுலத்தரசர் வடநாடுசெல்லுங்காலத்தில் தம் குலதெய்வமாகிய திருவரங்கப்பெருமானையும் உடன்கொண்டுசென்று வழிபடுதல் அவர்க்குக் கடமையாதலால் அவ்வாறுசென்று அவர்க்கு இருப்பிடமாகக்கொண்ட அயோத்தியில் அவரால் வழிபடப்பெற்றிருக்கலாமென்றுதோன்றுகிறது. இது,

'தேம்புனற் படப்பை மூதூர்த் திருநகர் அயோத்தி சேர்ந்த
பாம்பணை யமலன்றன்னைப் பழிச்சோடு வணக்கம் பேணி
.................. ..............அரசரும் மற்றுளோரும்
எம்பலுற்றிருந்தார்'.*

என்னும் கம்பர்பாடலுள் அயோத்தியுள்ளஎன்றது 'அயோத்தி சேர்ந்த பாம்பணையமலன்' என்ற குறிப்பால வெளியாகும்.

இவ்வாறு இக்ஷ்வாகுகுலத்தவரால் திருவரங்கத்தினின்று அயோத்திக்குக் கொண்டுசெல்லப்பெற்று அங்கு அவரால் பிரதிஷ்டித்து வழிபடப்பெற்றுவந்த பாம்பணையமலனை திருவரங்கப் பெருமான், பின்பு இராமன் வீடணற்கு வழங்கியபொழுது அவன் இலங்கைநோக்கிவருங்கால் திருவரங்கத்தில் யதாஸ்தானம் அங்குள்ள சோழர்களின் வேண்டுகோளால் மறுமுறை பிரதிஷ்டிதராயிருக்கலாமென்று கொள்ளில் விரோதமில்லை.

* யுத்தகாண்டம். விடைகொடுத்தபடலம். செய். 13.

இக்காலத்திலும் தேசாந்தரங்களிற் குடியேறும் தமிழ்மக்கள் தம் குலதெய்வமிருக்கும் கோயிலிற் பிடிமண் எடுத்துச்சென்று தாம் தங்கிவாழுமிடத்தில் கோயில் அமைத்து அதில் அப்பிடி மண்ணைப் பதித்து அதன்மேல் அத்தெய்வத்தின் உருவத்தை இயற்றித் தொழுதுவருகிறார்கள். இது தமிழ்மக்களது தொன்று தொட்ட மரபாயுள்ளது.

இன்னும், மனுகுலத்தவனான சிபியைப்பற்றி,

'பிறந்தநாட் டொடங்கி யாரும் துலைபுக்க பெரியோன்பெற்றி
மறந்தநாள் உளவோ'*

என்று இராமன்வாயாற் கம்பர் பேசியுள்ளார்.

இதனால், சிபி இராமாயணகாலத்துக்கு முற்பட்டவன் என்பது கம்பர்கருத்தாகும்.

இந்தச் சிபி தமிழ்நாட்டரசன் என்பதற்குச் சில சான்றுகள் உள்ளன. அவை வருமாறு:—

2. புறநானூறு.

புறநானூற்றுள் 37-ஆம் பாட்டில்,

'புள்ளுறு புன்கண் தீர்த்த வெள்வேற்
சினங்கெழு தானைச் செம்பியன் மருக' என்றும்,

43-ஆம் பாட்டில்,

'கூருகிர்ப் பருந்தின் ஏறுகுறித் தொரீஇத்
தன்னகம் புக்க குறுநடைப் புறவின்
தபுதி யஞ்சிச் சீரை புக்க
வரையா ஈகை யுரவோன் மருக' என்றும்,

46-ஆம் பாட்டில்,

'நீயே, புறவி னல்ல லன்றியும் பிறவும்
இடுக்கண் பலவும் விடுத்தோன் மருகனை' என்றும்,

39-ஆம் பாட்டில்,

'புறவி னல்லல் சொல்லிய கறையடி
யானை வான்மருப் பெறிந்த வெண்கடைக்
கோனிறை துலாஅம் புக்கோன் மருக' என்றும்,

---

* யுத்தகாண்டம். விபீஷணனடைக்கலப்படலம். செய். 110.

சரித்திரச்சான்றுகொண்டு சோழவரசர் சிபிமரபினர் எனப் பொய்யில் புலவராற் சொல்லப்பட்டனர்.

அன்றியும், மேற்குறித்த 39-ஆம் புறப்பாட்டினுள்ளே,

'........... ...... ............ ஓங்கிய
வரையளந் தறியாப் பொன்படு நெடுங்கோட்
டிமயஞ் சூட்டிய வேம விற்பொறி
மாண்வினை நெடுந்தேர் வானவன் தொலைய
வாடா வஞ்சி வாட்டுநின்
பீடுகெழு நோன்றாள் பாடுங் காலே'

என்பதனால், 'இமயவரையளவும் வடநாட்டவரை வென்று தன் விற்பொறியை இமயவரையிற் பொறித்த சேரன் அழியும்படி அவனை வென்ற நினதுமுயற்சியைப் பாடுமிடத்து யான் எங்ஙனம் புகல்வேன்' என்று சோழன் குளமுற்றத்துத்துஞ்சிய கிள்ளிவளவனை மாறோக்கத்து நப்பசலையார் பாடியுள்ளார்.

இங்கு ஒரு முக்கியமான விஷயம் ஊன்றிநோக்கத்தகும். புலவர்கள் ஒரு அரசனைப்பாடும் பாட்டில் அப்பாட்டுடைத்தலைவனுக்குப் பகையான அரசனைப் பொய்யே சிறப்பித்துப்பாடார். உண்மையான வெற்றி அப்பகையரசனுக்கு இருக்குமாகில் அதனை விளங்கக்கூறி, அத்தகைய சிறப்புடையானை வென்றாய்: என்று பாட்டுடையானைச் சிறப்பிப்பார். அங்ஙனமன்றிப் பகைவனுக்குப் பொய்யான வெற்றியைத் தாமே படைத்துக்கூறிக்கொண்டு அத்தகையானை வென்றாயென்றால் அது நகைப்புக்கிடமாகி இழிவு பயப்பதாகும். ஆதலால் சேரன் வடநாட்டவரை வென்று இமயவரையில் தன் விற்பொறி தீட்டினான்: என்பது உண்மையாகக் கொள்ளத்தக்கதே. இங்கு இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் என்ற பெயர்ப்பொருளும் நோக்கத்தக்கது.

இஃதுண்மையாகவே, அச்சேரரிற் சிறந்த சிபிமரபினரான தமிழச்சோழவரசரும் ஒருகாலத்தில் வடநாட்டவரை வென்று இமயமளவும் தம்மடிப்படுத்தி அயோத்தியாராஜ்யத்தை ஸ்தாபித்துக்கொண்டு ஆண்டுவந்திருக்கலாம் என்பது பொருந்தாததன்று.

'பொன்னிமயக் கோட்டுப் புலிபொறித்து மண்ணாண்டான்
மன்னன் வளவன் மதிற்புகார் வாழ்வேந்தன்'*

என்ற சிலப்பதிகாரப்பகுதியும் இதனை வலியுறுத்தும். இது அரசர் குலத்துதித்துத் துறவடைந்த பொய்யில்புலவரான இளங்கோவடிகள் வாக்கு.

இனி, சிபிமரபினர்க்குத் தொன்றுதொட்டுரிமையுள்ள நாடு காவிரிநாடென்பதைப் பின்வரும் வடநூற்பிரமாணங்களாலும் அறியலாம்.

### 3. பாணிநீய வியாகரணம்.

பாணிநீயவியாகரணத்தில், "ஜநபதஶப்தாத் க்ஷத்ரியாதஞ்" என்று ஒரு சூத்திரம் உண்டு. அதன் விருத்தி,

"ஜநபதக்ஷத்ரியயோ வாசகாத் அஞ் ஸ்யாத் தஸ்யாபத்யே"

என்பது.

இதன்பொருள்:— 'ஒருதேசத்துக்கும் அதனையாளும் அரசனாகிய க்ஷத்திரியனுக்கும் பொதுவாயுள்ள ஒருபெயர் பகுதியாக, அப்பெயர்ப்பொருட்குரிய மக்கள் என்னும் பொருளில் (அப்பெயர்ப்பின்) அஞ் என்னும் விகுதி வரும் என்பதாம்.

இச்சூத்திரவிதிப்படி, ஒருநாட்டினுக்கும், அதன் அரசனுக்கும் உரிய சிபி (ஶிபி) என்னும் பெயர் பகுதியாக, அப்பெயர்ப்பொருட்குரிய மக்கள் என்னும் பொருளில் அஞ் என்னும் விகுதி வர, அதற்குரிய செய்கைசெய்ய, சைப்பியர் (ஶைப்யா:) என்னும் பெயர் உண்டாகிறது.

### 4. தசகுமாரசரிதம்.

சிபி என்னும் நாட்டின்பெயர் தண்டியாசிரியர் செய்த தசகுமாரசரிதத்தின் ஆறாவது உச்வாஸத்திற் காணப்படுகிறது. அது,

"ஶைக்ஷாத் ஶிபிஷு வஸ்ந்
ஸஹ பித்ரா ஜாதவேஶீ தேஶே ..."

* 17. ஆய்ச்சியர்குரவை. உள்வரிவாழ்த்து. 2.

ஸவநவஸாராம் யாத்ரா ப்ருகுஸந்த்ரோநாம்

காத்ரு ந விரமஹேஷிணாம் கஹோரஸீம் ககஸம்''

என்பது.

இதன் வியாக்யானமாயுள்ள ஹேஷு, லவதீபிகா என்பவைகளில், ஶிபிஷு—காவேரீதக்ஷிணதீரேஷு. (சிபியில் - காவிரியின் தென்கரைநாட்டில்) என்று குறிப்புரையெழுதி, அதற்கு ஆதாரவாக, " 'ஶிபிஶப்தோ யாவாஸு தக்ஷிணதீர தேஶேஷ்வதெ' (ஐஷ்வதெ) ஐதி வைஜயந்தீ'' என்று, வைஜயந்தியென்னும் வடமொழிநிகண்டில், சிபி (ஶிபி) யென்பது காவேரியின் தேன்கரைநாட்டிற்குப்பெயர்: என்று சொல்லியிருப்பதை மேற்கோள்காட்டி, சிபிநாடு சோழநாடென்று நிரூபிக்கப்பெற்றிருக்கிறது.

வடநெ (பட்டநே) என்றது காவிரிப்பூம்பட்டினத்தில் என்றவாறு.

பட்டினம் என்னும் தமிழ்ப்பெயர் கடற்றுறைநகருக்குப் பெயராய் அது சோழர்க்குரிய காவிரிப்பூம்பட்டினத்தை நாமைகதேசத்தால் உணர்த்துகிறது. இதனைப் பட்டினப்பாலை என்றபெயரால் அறியலாம். அது வடமொழிக்கண் தற்பவமாகத்திரிந்து 'பட்டநம்' என்றாயிற்று.

ஆகவே சிபி என்னும் நாடு, காவிரிப்பூம்பட்டினமுள்ளதும் காவேரியாற்றின் தென்கரைப்பகுதியுமான இரண்டு இலக்கணங்களையுடைய சோழவளநாடென்பது பெறப்பட்டது.

குருக்ஷேத்திரத்தை (குருநாட்டை) ஆண்ட ஒரு அரசனுக்குக் குருவென்று பெயராயதுபோலச் சிபிநாட்டை ஆண்ட ஒரு அரசனுக்குச் சிபி என்று பெயராயிற்று. ஆகவே, அவன்குலத்துதித்த மக்கள் சைப்யர் எனப் பெயர்பெற்றனர். அப்பெயர் தமிழில் தற்பவத்திரிபாய்ச் சேம்பியர் என்று சோழமன்னருக்குப் பெயராயிற்று.

பின், செம்பியர் ஆளும் நாடு சேம்பிநாடு என்றும், செம்பிநாடாள்பவர் சேம்பியர் என்றும் பெயர்கள் தோன்றின.

இவற்றால், இக்ஷ்வாகுகுலத்தவனாகிய சிபிக்குரிய நாடு சிபிநாடாகிய காவிரிப்பூம்பட்டினமிருந்த சோழவளநாடு என்றும், ஆச்சிபி மரபினர் வடநாடுசென்று அங்கும் ராஜ்யங்களை அமைத்துக்கொண்டு ஆண்டுவந்தாரென்றும், அதனால் அவர்களும் தமிழரே யென்றும் அறியலாயிற்று.

இம்முடிபிற்கு அநுகுணமான வேறுசில சான்றுகளும் உள்ளன. தொடர்புடைமையால் அவையும் ஈண்டு ஆராயப்படும்.

## 5. பெரியபுராணம்.

பெரியபுராணத்துள், திருவாரூர்ச்சிறப்புச்சொல்லி,

> 'அன்ன தொன்னகருக் கரசாயினன்
> துன்னும் வெங்கதிரோன்வழித் தோன்றினன்
> மன்னுசீர் அநபாயன்வழிமுதல்
> மின்னுமாமணிப்பூண் மனுவேந்தனே'*

என்று தொடங்கி மனுமுறை சொல்லப்படுகிறது.

இப்பாட்டினுள், அநபாயசோழனுக்குக் குலமுதல்வன் மனுவேந்தனென்றும், அவன் கதிரோன்வழித்தோன்றினவன் என்றும் சொல்லப்பட்டுள்ளான்.

கதிரோன்வழித் தோன்றினன் என்பதற்குக் கதிரோனையடுத்துத்தோன்றினன் என்பது பொருள். இது தலைப்பிள்ளைக்கு அடுத்தபிள்ளையை வழிப்பிள்ளையென்பதுபோலும் வழக்கு. இதனால், கதிரோன் குலமுதல்வனானான்; அவனையடுத்து மனுவும் குலமுதல்வனானான் என்பதாம். இக்கருத்தானே மனுவேந்தன், குலமுதலென்னாது வழிமுதல் எனப்பட்டான்.

இதனால், மனுவேந்தனென்பான் சூரியனுக்கு (=விவஸ்வானுக்கு)ப் பின் அவன் மகனாகவந்த வைவச்சுதமனுவென்று அறியத்தக்கதாயிற்று.

"மனுப்பெற்றநீதியும் தன்பெயராக்கினான்"† என்றமையால் வைவச்சுதமனு வேறு; மனுவேந்தன் என்பான் வேறு, என்னுமோ எனின், என்னும். 'மனுப்பெற்றநீதியும் தன் பெயராக்கினான்'

* திருவாரூர்ச்சிறப்பு. செய். 13. † திருவாரூர்ச்சிறப்பு. செய். 15.

என்றது முன்னூழியினின்றும்பெற்ற விருத்த (வூஜ) மனு நீதியைப் புதுப்பித்துத் தன்பெயரால் ஆக்கிக்கொண்டான் என்ப தாம். இதனைத் 'தோன்மனுநூற்றொடை'* என்றமையான் அறிய லாம். 'மனுமொழி யாது? அது மருந்து' என்றபொருளை வேதம் சொல்லுதலாலும் மனுநூல் அநாதியாயுண்டென்று அறியத்தக்கது.

இவற்றால், வைவச்சுதமனு சோழர்குலமுதல்வனென்றும், அவன் தமிழ்நாட்டரசனென்றும், தமிழனென்றும் புலனும். இக் கருத்து, அடுத்துக் காட்டப்பட்டுள்ள விக்கிரமசோழனுலா அடிக ளாலும் வலியுறும்.

6. விக்கிரமசோழனுலா.

விக்கிரமசோழனுலாவில், பிரும்மபுத்திரன் காசிபன், அவன் மகன் மரீசி, அவன் மகன் கதிரவன் (விவஸ்வான்) என்று கூறி, அவன்மகன் மனு (வைவச்சுதன்) என்றும், இவன்,

'............................மையல்கூர்
சிந்தனை யாவிற்கு முற்றத் திருத்தேரில்
மைந்தனை யூர்ந்த மனு'†

என்றும் சொல்லப்படுகிறான். இவன்பின்,

'ஆடு துறையில் அடுபுலியம் புல்வாயும்
கூடநீ ரூட்டிய கொற்றவனும்'‡

என்று தொடங்கி, இம் மனுவின்வழிவந்த பல தமிழ்மன்னவர் (சோழர்)களுடைய சரித்திரப்பிரபாவங்கள் சொல்லப்பட்டன.§

இங்கு இம்மனுகுலத்தில் பின்பு தோன்றியவருள் ஒருவனை,

'காக்கும் சிறுபுறவுக்காகத் களிகூர்ந்து
தூக்கும் துலைபுக்க தூயோன்'¶

என்று சிபிச்சக்கிரவர்த்தி சொல்லப்படுகிறான். இவன்மரபின ரெல்லோரும் சைப்பியர் என்னும் பெயர்த்திரிபாலும் செம்பிய ரெனப்படுவர்.

---

* திருவாரூர்ச்சிறப்பு. செய். 37. † கண்ணி. 4. ‡ கண்ணி. 5.

§ அவற்றுள், 'கூற வரிய மனுக்கொணர்ந்து கூற்றுக்குத், தேற வழக் குரைத்த செம்பியன்'(கண்ணி. 7.) என்றதில் செம்பியன் என்பது சோழன் என்னுந் துணையாய்நின்றது. ¶ கண்ணி-11.

இனி, மநுகுலத்தவர்கள் தமிழர் என்பதற்கு வடநூலுள்ளும் தக்க சான்றுகள் காணப்படுகின்றன. அவையும் வருமாறு:—

### 7. ஸ்ரீ பாகவதம்.

ஸ்ரீபாகவதம் எட்டாவது ஸ்கந்தம் இருபத்துநான்காம் அத்யாயத்தில், 7, 10, 11, 12, 13-ஆம் சுலோகங்கள்,

𑌆𑌸𑍀𑌦𑌤𑍀𑌤𑌕𑌲𑍍𑌪𑌾𑌨𑍍𑌤𑍇 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑍋 𑌨𑍈𑌮𑌿𑌤𑍍𑌤𑌿𑌕𑍋 𑌲𑌯𑌃।
𑌸𑌮𑍁𑌦𑍍𑌰𑍋𑌪𑌪𑍍𑌲𑍁𑌤𑌾𑌸𑍍𑌤𑌤𑍍𑌰 𑌲𑍋𑌕𑌾 𑌭𑍂𑌰𑌾𑌦𑌯𑍋 𑌨𑍃𑌪॥
𑌤𑌤𑍍𑌰 𑌰𑌾𑌜𑌰𑍍𑌷𑌿𑌃 𑌕𑌶𑍍𑌚𑌿𑌨𑍍 𑌨𑌾𑌮𑍍𑌨𑌾 𑌸𑌤𑍍𑌯𑌵𑍍𑌰𑌤𑍋 𑌮𑌹𑌾𑌨𑍍।
𑌨𑌾𑌰𑌾𑌯𑌣𑌪𑌰𑍋𑌽𑌤𑌪𑍍𑌯𑌤𑍍 𑌤𑌪𑌃 𑌸 𑌸𑌲𑌿𑌲𑌾𑌶𑌨𑌃॥
𑌯𑍋𑌽𑌸𑌾𑌵𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 𑌮𑌹𑌾𑌕𑌲𑍍𑌪𑍇 𑌤𑌨𑌯𑌃 𑌸 𑌵𑌿𑌵𑌸𑍍𑌵𑌤𑌃।
𑌶𑍍𑌰𑌾𑌦𑍍𑌧𑌦𑍇𑌵 𑌇𑌤𑌿 𑌖𑍍𑌯𑌾𑌤𑍋 𑌮𑌨𑍁𑌤𑍍𑌵𑍇 𑌹𑌰𑌿𑌣𑌾𑌰𑍍𑌪𑌿𑌤𑌃॥
𑌏𑌕𑌦𑌾 𑌕𑍃𑌤𑌮𑌾𑌲𑌾𑌯𑌾𑌂 𑌕𑍁𑌰𑍍𑌵𑌤𑍋 𑌜𑌲𑌤𑌰𑍍𑌪𑌣𑌂।
𑌤𑌸𑍍𑌯𑌾𑌞𑍍𑌜𑌲𑍍𑌯𑍁𑌦𑌕𑍇 𑌕𑌾𑌚𑌿𑌚𑍍𑌛𑌫𑌰𑍍𑌯𑍇𑌕𑌾𑌭𑍍𑌯𑌪𑌦𑍍𑌯𑌤॥
𑌸𑌤𑍍𑌯𑌵𑍍𑌰𑌤𑍋𑌽𑌞𑍍𑌜𑌲𑌿𑌗𑌤𑌾𑌂 𑌸𑌹 𑌤𑍋𑌯𑍇𑌨 𑌭𑌾𑌰𑌤।
𑌉𑌤𑍍𑌸𑌸𑌰𑍍𑌜 𑌨𑌦𑍀𑌤𑍋𑌯𑍇 𑌶𑌫𑌰𑍀𑌂 𑌦𑍍𑌰𑌵𑌿𑌡𑍇𑌶𑍍𑌵𑌰𑌃॥

என்பனவாம்.

இவற்றின்பொருள்:—சென்ற ஊழிமுடிவில் உலகங்கள் கடல்நீரில் முழுகத்தலைப்பட்டன; அப்பொழுது ஸத்தியவிரதன் என்னும் பெயருடைய பெருமைவாய்ந்த ஒரு ராஜருஷியாயுள்ளவன் நீரையே உணவாகக்கொண்டு திருமாலைநோக்கித் தவம்புரிந்தான். அவன்தான் இப்போது நடைபெற்றுவருகிற கற்பத்துக்குச் சிராத்ததேவன் என்னும் பெயருடையனாய், விவஸ்வான்மகனான வைவச்சுதமனுவாகத் திருமாலால் நியமிக்கப்பெற்றவன். இவன், ஒருகாலம் (பாண்டிநாட்டிலுள்ள) கிருதமாலை (வையை) என்னும் நதியில் ஜலதர்ப்பணம்பண்ணிக்கொண்டிருந்தான். அப்போது அவனுடைய இருகையாலும் அள்ளிய அர்க்யஜலத்தில் ஒரு பெண்மீன் தோன்றிற்று. அந்த ஸத்யவிரதன் என்னும் தமிழ்நாட்டரசன் தன் கைந்நீரையடைந்த பெண்மீனை அந்த நீருடன் (தன் கைந்நீருடன்) கிருதமாலாநதீஜலத்தில் (வையைநீரில்) கவிழ்த்துவிட்டான்; என்பது.

இதனுள், ஸத்யவிரதன் என்னும் அரசன், தமிழ்நாட்டரசன் (த்ரவிடேஶ்வர꞉) என்று சொல்லப்பட்டிருப்பதால் அவன் தமிழன் என்பதும், தமிழ்மக்கட்கரசன் என்பதும் பெறப்படுகின்றன.*

அவன் கிருதமாலை (வைகை) என்னும் நதியில் ஜலதர்ப்பணம் பண்ணினன் என்றமையால் பாண்டிநாட்டிலுள்ளவன் என்பதும் பெறப்பட்டது.

இதனால், சென்றவூழியிலும் பாண்டிநாடு தமிழ்நாடாயிருந்த தென்று வெளியாகிறது.

மேலும், எட்டாவது ஸ்கந்தத்தின் இருபத்துநான்காம் அத்தியாயத்தில் 58-ஆம் சுலோகம்,

ஸ து ஸத்யவ்ரதோ ராஜா ஜ்ஞாநவிஜ்ஞாநஸம்யுத꞉ ।

விஷ்ணோ꞉ ப்ரஸாதாத் கல்பே(அ)ஸ்மிந்நாஸீத் வைவஸ்வதோ மநு꞉ ॥

என்பது.

இதன்பொருள்:—அந்த ஸத்தியவிரதனென்னும் அரசன், விஷ்ணுவின் அநுக்கிரகத்தால் ஆத்மதத்வஜ்ஞானமும், சாஸ்திர ஜ்ஞானமுமுடையவனாய் இந்தக்கல்பத்தில் வைவச்சுதமனுவானான்: என்பது.

இதனால் இவ்வூழிக்கு முதல்வனாகிய வைவச்சுதமனு முற்பிறப்பால் தமிழரசனாயிருந்து நீதிபுரிந்துவந்த வாசனையுடையன் என்பதும், அதனோடு தெய்வாநுக்கிரகத்தாலுண்டாகிய ஞான விஞ்ஞானங்களையுடையனாதலால் அவன் நீதிநெறிவழுவாது செலுத்தற்குரிய மனுவானான்: என்பதும் பெறப்பட்டன.

ஒன்பதாவது ஸ்கந்தத்தின் முதல் அத்தியாயத்தில் 2, 3 சுலோகங்கள்,

யோ(அ)ஸௌ ஸத்யவ்ரதோ நாம ராஜர்ஷிர்த்ரவிடேஶ்வர꞉ ।

* தமிழ்மொழி ஊழிமுதலில் மானுஷபாஷையென்ற பெயருடையதாயிருந்து காலக்கிரமத்தில் பிறபாஷைகள் தோன்றியபின்பு சுருங்கிய தேச விசேஷம்பற்றியபெயரால் திராவிடம் என்று வழங்கப்பெறுவதாயிற்று: என்று தோன்றுகிறது.

ஜ்ஞாநம் யோऽதீதகல்பாந்தே லேபே புருஷஸேவயா ||
ஸ வை விவஸ்வத: புத்ரோ மநுராஸீதிதி ச்ருதம் |

என்பவை.

இவற்றின்பொருள்:—தமிழரசனும் ராஜருஷியாயுமுள்ள எந்த ஸத்தியவிரதன், சென்ற கல்பத்தின்முடிவில் பரமபுருஷனை திருமாலை வழிபட்டு ஞானத்தைபடைந்தானோ அவனே விவஸ்வானுக்கு (ஸூர்யனுக்கு)ப் புத்திரனான வைவச்சுதன் என்னும் மனுவானான் என்று கேட்கப்பட்டது: என்பது.

இதனால் ஸத்யவிரதன் திரவிடேசுவரன் (தமிழ்நாட்டரசன்) என்று அநுவாதமுகத்தாலும் (கொண்டுகூற்றாலும்) வலியுறுத்தப் பட்டிருக்கிறது.

மேலும், 9-ஆம் ஸ்கந்தத்தின் 2-ஆம் அத்தியாயத்தின் 2-ஆம் சுலோகம்,

ததோऽயஜந் மநுர்தேவம் அபத்யார்த்தம் ஹரிம் ப்ரபும் |
இக்ஷ்வாகுபூர்வஜாந் புத்ராந் லேபே ஸ்வஸத்ருசாந் தச ||

என்பது.

இதன்பொருள்:—பிறகு மனுவான வைவச்சுதன் மக்கட்பேற்றை விரும்பி ஸ்வாமியாயும் தேவனாயுமுள்ள திருமாலை வழிபட்டுத் தனக்கு ஒப்பான இக்ஷ்வாகுமுதலாயுள்ள *பத்துப்புத்திரரைப் பெற்றான்: என்பது.

இதனால் மனுவின்புதல்வர் பதின்மருள் முதலாவான் இக்ஷ்வாகு என்பது சொல்லப்பட்டிருக்கிறது. அதனால் அவனும் தமிழ் நாட்டரசனான தமிழன் என்று தோன்றுகிறது.

9-ஆம் ஸ்கந்தத்தின் முதல் அத்தியாயத்தில் 41-ஆம் சுலோகம்,

தஸ்யோத்கலோ கயோ ராஜந் விமலச்ச த்ரய: ஸுதா: |
தக்ஷிணாபதராஜாநோ பபூவுர்தர்மவத்ஸலா: ||

என்பது.

* இப்பதின்மருள் ஒருவன் அவசமாய்ப் பசுக்கொலைபுரிந்து பிராயச்சித்தமடைந்தவனாகச் சொல்லப்பட்டவன்.

இதனால் அந்த மனுபுத்திரனான சுத்யும்நன்மக்கள் உற்கலன், கயன், விமலன் என்னும் மூவரும் தர்மத்தில் பிரியமுள்ளவராய்த் தெற்கேயுள்ள பிறநாட்டுக்கு அரசரானார்கள்: என்று சொல்லப்பட்டிருக்கிறது. இங்கு, தெற்கேயுள்ள பிறநாடென்பது திராவிட தேசத்துக்குத் தெற்கேயுள்ள நாடுகளாம். (அவை பிற்காலத்துக் கடல்கொள்ளப்பட்டன.)

இதனால் இம்மூவேந்தரும் தமிழர் என்பதும் பிற தென்தமிழ் நாட்டரசரென்பதும் பெறப்படும்.

9 - ஆம் ஸ்கந்தத்தின் 2 - ஆம் அத்தியாயத்தில் 16 - ஆம் சுலோகம்,

கரூஷாந்மாநவாதாஸந் காரூஷா: க்ஷத்ரஜாதய: ।
உத்தராபதகோப்தாரோ ப்ரஹ்மண்யா தர்மவத்ஸலா: ॥

என்பது.

இதன்பொருள்:—கரூஷன் என்னும் மனுமகனிடத்திலிருந்து காரூஷர் என்னும் க்ஷத்திரியஜாதியாருண்டானார்கள். அவர்கள் பிரஹ்மவித்துக்களான ராஜருஷிகளாயும் கருமத்தில் அன்புள்ளவர்களாயும் (திராவிடநாட்டுக்கு) வடக்கேயுள்ள பிறநாட்டுக்கரசரானார்கள்: என்பது.

இங்கு, தென்னாட்டிற்கும் வடநாட்டிற்கும் இடையே திசைப் பொருள்நீக்கத்துக்கு எல்லையாயுள்ளது திராவிடநாடாயிற்று. இதனாலும், மனுவும் இக்ஷ்வாகுவும் திராவிடர் என்றறியலாம்.

இதனால் வடநாடுகாவலரான அரசர்களும் பூருவகாலத்தில் தமிழராயிருந்தார்கள் என்றும், அவர்கள் பிரஹ்மவித்துக்களானார்களென்றும் அறியத்தகும். இதனை அநுசரித்த,

இமம்விவஸ்வதே யோகம் ப்ரோக்தவாநஹமவ்யயம் ।
விவஸ்வாந்மநவே ப்ராஹ மநுரிக்ஷ்வாகவே(அ)ப்ரவீத் ॥
ஏவம்பரம்பராப்ராப்தமிமம் ராஜர்ஷயோவிது: ।

என்ற கீதாவாக்கியங்களும் இங்கு நோக்கத்தகும்.

இவற்றின்பொருள்:— (ஸ்ரீகிருஷ்ணபகவான் அருச்சுனனை நோக்கி) நான் இந்தக் குறையற்றதாயுள்ள ஞானயோகத்தை விவஸ்வானுக்குச் சொன்னேன். விவஸ்வான் (தன்புத்திரனுன) மனுவுக்குச் சொன்னான். மனு (தன்புத்திரனுன) இக்ஷ்வாகுவுக்குச் சொன்னான். இந்தப்பிரகாரம் குலபரம்பரையாய்வந்த இந்த ஞானயோகத்தை ராஜருஷிகள் அறிகிறார்கள்: என்பது.

இதனாலும், மனுகுலத்தரசர்கள், ராஜருஷிகளான பிரும்மவித்துக்களாயிருந்தார்களென்றறியலாம்.

9 - ஆம் ஸ்கந்தத்தின் 2 - ஆம் அத்தியாயத்தில் 33 - ஆம் சுலோகம்,

𑌵𑌿𑌶𑌾𑌲𑌶𑍍𑌶𑍂𑌨𑍍𑌯𑌬𑌨𑍍𑌧𑍁𑌶𑍍𑌚 𑌧𑍂𑌮𑍍𑌰𑌕𑍇𑌤𑍁𑌶𑍍𑌚 𑌤𑌤𑍍𑌸𑍁𑌤𑌾𑌃 ।
𑌵𑌿𑌶𑌾𑌲𑍋 𑌵𑌂𑌶𑌕𑍃𑌦𑍍𑌰𑌾𑌜𑌾 𑌵𑍈𑌶𑌾𑌲𑍀𑌂 𑌨𑌿𑌰𑍍𑌮𑌮𑍇 𑌪𑍁𑌰𑍀𑌮𑍍 ॥

இதன்பொருள்:— விசாலன், சூன்யபந்து, தூம்ரகேது: என்னும் மனுமரபினர்கள் மூவருள், விசாலன் என்னும் அரசன் சந்ததியுள்ளவனாய் வைசாலீ என்னும் நகரத்தையுண்டாக்கினான்: என்பது.

இவற்றால் தமிழராகிய மனுமரபினர் *வடநாடுகளிற்சென்று ராஜ்யஸ்தாபனம்செய்துகொண்டார்கள்: என்று தெளிவாகச் சொல்லப்பட்டமையால் இக்ஷ்வாகு குலபரம்பரையார் வடநாடுசெல்லுங்கால் தங்கள் குலாராதனமான திருவரங்கப்பெருமானையும் உடன்கொண்டுசென்று வழிபட்டுவந்திருக்கலாமென்றும் கொள்ளுதற்கு இடந்தருகிறது.

விபீஷணனுக்குத் திருவரங்கப்பெருமானை இராமனருளியதாகக் கம்பராவது வான்மீகராவது சொல்லவில்லை. ஆனாலும், '𑌅𑌨𑍁𑌕𑍍𑌤𑌂 𑌅𑌨𑍍𑌯𑌤𑍋 𑌗𑍍𑌰𑌾𑌹𑍍𑌯𑌂' என்கிற கிரமத்தாலே வேறு பிரமாணங்களால் விபீஷணன் பெற்றுவந்தானென்றுகொள்ளலாம்.

---

* சோழன் செங்கணானைத் 'தென்தமிழன் வடபுலக்கோன் சோழன்' (பெரியதிருமொழி. 6. 6. 5.) என்று திருமங்கையாழ்வார்கூறுதலும் இங்கு நோக்கத்தகும். இதனாலும் சோழகுலத்தவர்க்கு வடநாட்டுரிமையும் வந்தேறியாயுண்டென்றறியலாம்.

அதனால் அவன் இலங்கைக்குச்செல்லும்போது யதாஸ்தானம் பிரதிஷ்டிதாரானார் என்பது விரோதமாகாது.

### 8. மாத்ஸ்யபுராணம்.

இனி, மாத்ஸ்யபுராணத்தில், முதல் அத்யாயத்தில்,

𑌪𑍁𑌤𑍍𑌰𑍇 𑌰𑌾𑌜𑍍𑌯𑌂 𑌸𑌮𑌾𑌰𑍋𑌪𑍍𑌯 𑌕𑍍𑌷𑌮𑌾𑌵𑌾𑌨𑍍 𑌰𑌵𑌿𑌨𑌨𑍍𑌦𑌨𑌃 ।
𑌮𑌲𑌯𑌸𑍍𑌯𑍈𑌕𑌦𑍇𑌶𑍇 𑌤𑍁 𑌸𑌰𑍍𑌵𑌾𑌤𑍍𑌮𑌗𑍁𑌣𑌸𑌂𑌯𑍁𑌤𑌃 ॥
𑌸𑍁𑌖𑌦𑍁𑌃𑌖𑌸𑌮𑍋 𑌵𑍀𑌰𑌃 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌵𑌾𑌨𑍍 𑌯𑍋𑌗𑌮𑍁𑌤𑍍𑌤𑌮𑌂 ।

என்று சொல்லப்பட்டிருக்கிறது.

இதன்பொருள்:—சூரியபுத்திரனான வைவச்சுதமனு தன் புத்திரனான இக்ஷ்வாகுவிடத்தில் ராஜ்யபாரத்தைவைத்துவிட்டுப் பொறுமையுடையவனாயும் ஆன்மகுணங்களெல்லாம் நிரம்பினவனாயும் இன்பதுன்பங்களிற் சமபுத்தியுள்ளவனாயுமிருந்துகொண்டு பொதியமலையின் ஒருபகுதியில் உத்தமமான யோகமுயற்சியை யடைந்தவனாயிருந்தான்: என்பது.

இவன் இமயம் விரும்பாது பொதியமலையில் யோகநிலையடைதலால் தென்னாட்டினன் என்பதும் தமிழன் என்பதும் வெளியாம்.

இவற்றால், வைவச்சுதமனுவின்மகன் இக்ஷ்வாகுவும் தென்னாட்டுத் தமிழரசனாய்த் திருவரங்கங்கோயில்கண்டவனென்று கம்பர் சொல்லியிருப்பதும், மனுவைச் சோழனென்று சேக்கிழார் கூறியிருப்பதும் பொருந்துகின்றன.

இதுகாறும் வான்மீகத்திலுள்ள 'மாநுஷீவாக்', 'மானுஷம் வாக்யம்' என்று தமிழ்ப்பாஷையைக்கூறிய சொற்பொருட்குறிப்புக்களாற் றோன்றிய பொருள்களைத் தொடர்புபற்றி ஆராய்ந்ததினின்றும், இப்போது நடந்துவருகிற வைவச்சுதமன்வந்தரத்தொடக்கத்திலிருந்து இராமாயணகாலம்வரை பரதகண்டமுழுதும் தமிழே மாநுஷபாஷையாக வழங்கப்பெற்றுவந்ததென்று வெளியாயிற்று.

திரு. நாராயணையங்கார்,
பத்திராசிரியர்.

ஸ்ரீ:

# ஒரு வெள்ளிவிழா வெளியீடு.

இது, திருவல்லிக்கேணியில் ரிட்டயர்ட் ஜட்ஜாயிருந்த திவான் பஹதூர், எம். ஓ. பார்த்தசாரதி ஐயங்காரவர்களால் ஸ்தாபிக்கப் பெற்ற தர்மஸ்தாபனத்தில் 31–12–1938-ல் நடந்த வெள்ளிவிழாக் கொண்டாட்டத்தின் ஞாபகச்சின்னமாக வெளியிடப்பட்டது.

இதில், ப்ரபந்நர்கள் அறிந்துகொள்ளவேண்டிய ரஹஸ்யார்த்தங்களான ஸ்வஸ்வரூப பரஸ்வரூப விரோதிஸ்வரூப உபாயஸ்வரூப ப(ல)லஸ்வரூபங்கள் ஸ்ரீராமாயணத்தாலும் ததநுகுணமான ஆழ்வாராசார்யர்களுடைய திவ்யஸூக்திகளாலும் நன்கு நிரூபித்தெழுதப்பட்டுள்ளன.

அவற்றுள், ஸ்வஸ்வரூப நிரூபணமும் பரஸ்வரூபநிரூபணமும் ஸ்ரீகாஞ்சி, பிரதிவாதிபயங்கரம் ஸ்ரீ. உப. வே. அண்ணங்கராசார்ய ஸ்வாமியால் செய்யப்பெற்றவை.

அவற்றுள், ஸ்வஸ்வரூபநிரூபணத்துக்கு உறுப்பாயுள்ள பகவச்சேஷத்துவ பாரதந்த்ரியங்களுக்கு ஸ்ரீராமாயணத்திலிருந்து இளையபெருமாள் பரதாழ்வான்: இவர்களநுஷ்டானத்தை நிதர்சனமாகக்காட்டி நிரூபித்து, பாகவதசேஷத்துவ பாரதந்த்ரியங்களுக்குப் பெருமாள் சத்ருக்நாழ்வான்: இவர்களநுஷ்டானத்தை நிதர்சனமாகக்காட்டி நிரூபணஞ்செய்யப்பெற்றிருக்கிறது.

பரஸ்வரூபம் சொல்லுமிடத்தில் மற்றவற்றைச் சுருங்கச் சொல்லிப் பகவத்க்ருபாரூபமான குணவிசேஷத்தை ப்ரதானமாகக்கொண்டு அது பாதுக்கதுக்கித்வம் என்று தூஷணபரிஹாரங்களோடு மிக விரிவாயெழுதப்பெற்றிருக்கிறது.

விரோதிஸ்வரூபநிரூபணம் காரப்பங்காடு சிங்கப்பெருமாள் ஸ்வாமிகுமாரர் சிரோமணி ஸ்ரீ. உப. வே. வேங்கடாசாரியஸ்வாமியால் செய்யப்பெற்றது.

அதில் விரோதிஸ்வரூபம் பூர்வகர்மம் என்றும், பகவதபசார முதலான பாபவிசேஷங்கள் என்றும், அது ஸ்வரூபவிரோதி, உபாயவிரோதி, ப்ராப்யவிரோதி என்று மூன்றுபடிப்பட்டிருக்குமென்றும் சொல்லி, ஸ்வரூபவிரோதி ஸ்வஸ்வாதந்திரியமென்றும், உபாயவிரோதி ஸ்வரக்ஷணத்தில் ஸ்வப்ரவ்ருத்தியென்றும், ப்ராப்யவிரோதி கைங்கர்யத்தில் மமதாபுத்தியென்றும் தெளிவுபெறுமாறு ஸ்ரீராமாயணப்ரமாணவாக்கியங்களால் விரித்துரைக்கப்பெற்றது.

ஸ்ரீராமாயணமும் பகவதுபாயபாவமும் என்ற தலைப்பின்கீழ், திருமழிசை ஸ்ரீ, உப. வே. கோயிற்கந்தாடை, அ. ராமாநுஜாசார்யஸ்வாமியால் உபாயஸ்வரூபநிரூபணம் செய்யப்பெற்றிருக்கிறது.

அதில் ஸ்ரீராமாயணத்துள், பாலகாண்டம் தொடங்கி ஒவ்வொரு காண்டத்திலும் பெருமாளே ப்ராப்திக்கு உபாயபூதனாயிருக்குமிருப்பை விசதமாயெடுத்துக்காட்டித் திருவாய்மொழியிலும் முதற்பத்துத்தொடங்கிப் பத்தாம்பத்தளவும் இவ்வர்த்தம் அறுதியிடப்பட்டதென்று காட்டி முடிக்கப்பெற்றது.

வாழ்வு என்ற தலைப்பின்கீழ்த் திருநாராயணபுரம் ஸ்ரீ. உப. வே. தி. அ. கோவிந்தப்பங்கார்ஸ்வாமியால் ப(ஃ)லஸ்வரூபநிரூபணம் செய்யப்பெற்றது.

அதில் ஐசுவரிய, கைவல்ய, பகவத்ப்ராப்திரூப பலங்களிருக்கும்படியை ப்ரமாணபூர்வகமாக நிரூபித்து, பரமபுருஷார்த்தமான பகவத்ப்ராப்தியில் ஆசார்யவர்யர்களுடைய அத்யவஸாயபேதத்தையும் காட்டி, பகவத்சேஷத்வ பாரதந்த்ரியாநுகுணமான பகவந்முகோல்லாஸ கைங்கர்யமே வாழ்வு என்று பரிஸமாப்திசெய்யப்பெற்றது.

இவ்வாறு ஸ்ரீவைஷ்ணவர்களறியவேண்டிய ஸ்வரூபப்பிரகாசகமான உபந்யாஸங்களுக்கு மாத்ருகமாயிருக்கும்படி இதனை வெளியிட்டுதவிய எம். ஒ பார்த்தசாரதி ஐயங்கார் தர்மஸ்தாபனத்தின் நிர்வாஹகர்க்கு ஸ்ரீவைஷ்ணவர்களெல்லோரும் கிருதஜ்ஞர்களாகக்கடவர்.

---

ஸ்ரீ:

# மதிப்புரை.

தஞ்சைவாணன்கோவை:—புலவர்திலகரான பொய்யாமொழியார் பாண்டியன்தானைத்தலைவனும் வாணர்குலத்தோன்றலுமான தஞ்சைவாணனைப் பாட்டுடைத்தலைவனாகவைத் தியற்றிய தஞ்சைவாணன்கோவையின் சொற்பொருளணிநலமுதலியவற்றைக் கற்றோர் பலரும் தெற்றென அறிவர்.

இவ் வரிய பெரிய நூலினை அதனுட்பொருளெல்லாம் நன்கு விளங்கும்படி, சென்னைப் புரசை லுத்தரன்மிஷன் உயர்தரக்கலாசாலைத் தலைமைத்தமிழாசிரியர் வித்துவான் திரு. மே. வீ. வேணுகோபாலப்பிள்ளையவர்கள் தாம் நூதனமாக ஆராய்ந்தெழுதிய விளக்கக்குறிப்புரை, இயல்விளக்கம், கிளவித்தொகைவிளக்கம், செய்யுளகராதி, அரும்பத அகராதி முதலியவற்றுடன் கற்பவர்க்கெல்லாம் நற்பயனுதவும் முறையில் அழகிய புத்தகமாக அச்சிட்டு வெளியிட்டுள்ளார்கள்.

இதற்கு மதுரை அமெரிக்கன்கல்லூரித் தலைமைத்தமிழாசிரியர் திரு. ஆ. கார்மேகக்கோனாரவர்கள் எழுதியுதவிய அணிந்துரையால் இப்பதிப்பின் சிறப்பு நன்குபுலனாம்.

தடித்த கடிதத்தில் திருத்தமாக 250 பக்கத்தில் அச்சிட்டுக் கலிக்கோ பைண்டு செய்யப்பட்டுள்ள இப்புத்தகத்தின்விலை ரூபா இரண்டு. வேண்டுவோர் திரு. M. R. அப்பாதுரைப்பிள்ளை B.A., அவர்கள் 57. ஆண்டர்ஸன்தெரு, சென்னை: என்ற விலாசத்திற் பெறலாம்.

சங்கரவிலாசம்:—இது, சிவபுராணங்களிற் கூறப்படும் விசேடங்களைத் திரட்டியுரைப்பது; சங்கரநயினார்கோயிலுக்கருகிலுள்ள விஜயநாராயணமென்னும் ஊரில் வாழ்ந்த சிதம்பரநாதபூபதியென்பவரால் இனிய செய்யுணடையிலியற்றப்பட்டதொரு சிறந்த காவியம்; காப்பும் கடவுள்வாழ்த்தும் பதிகமும் உபமன்யு திருப்பாற்கடல் பெற்ற அத்தியாயம் முதலாக, கோதாவிரி மகிமையுரைத்த அத்தியாயம் ஈறாக உள்ள இருபத்துமூன்று அத்தியாயங்களும் உடையது; 1345 செய்யுட்களோடு விளங்குவது.

இதில் முதற் பன்னிரண்டு அத்தியாயங்களால் சிவமான்மியமும், 13-முதல் 16-வரையுள்ள அத்தியாயங்களால், பஞ்சாக்கரம், சிவநாமம், விபூதி, உருத்திராக்கம் என்பவற்றின் பெருமையும், 17-ஆம் அத்தியாயத்தால் சோமவாரவிரதமான்மியமும், 18-முதல் 22-முடியவுள்ள அத்தியாயங்களால் திருவாரூர்க் கமலாலயம், காஞ்சீபுரம், திருக்காளத்தி, ஸ்ரீசைலம், உருத்திரகோடி என்னும் தலங்களின் மான்மியமும், 23-வது அத்தியாயத்தால் கோதாவிரி (தீர்த்த) மான்மியமும் விரித்து விளக்கியுரைக்கப்பட்டுள்ளன.

இன்பம், தெளிவு, செறிவு முதலிய நெறிகளாற் பழைய காவியங்களோடெண்ணத்தக்க இந்நூலை யாழ்ப்பாணத்துக் கொக்குவில் பிரமஸ்ரீ சி. இரத்தினசபாபதி ஐயரவர்கள் அரிதின்முயன்று வெளியிட்டுள்ளார்கள். இவ் வரியநூல் சிதலுக்கிரையாய் அழிந்தொழியாது அச்சிட்டுதவிய ஐயரவர்களுடைய நன்முயற்சி பொதுவாகத் தமிழர்களாலும் சிறப்பாகச் சைவர்களாலும் நன்கு பாராட்டத்தக்கது.

இதன்விலை ரூபா 2—0—0. வேண்டுவோர் ஸ்ரீ. சி. இரத்தினசபாபதி ஐயரவர்கள், சோதிடபரிபாலன மடம், கொக்குவில், யாழ்ப்பாணம்: என்ற விலாசத்துக்கு எழுதிப் பெறலாம்.

ஸ்ரீ ரமண சந்நிதிமுறை (இரண்டாம்பதிப்பு):—இது, அண்ணு மலையில் அமர்ந்த வாலறிவனு, மண்ணோர் புகழும் ரமணமாமுனி வரன் அருளும் ஆற்றலும் அருமையும் பெருமையும் விழுமிய செய்யுளான் விரித்துரைப்பது; திருவாசகம் தேவாரம் முதலிய தமிழ்மறைகளிலும், பட்டினத்தார் அருணகிரியார் தாயுமானவர் முதலிய பெரியார் பிரபந்தங்களிலும் பயிலும் கருத்துக்களும் சொற்பொருணடைநலங்களும் தோய்ந்ததாய்ப் பரமததூஷணை யில்லதாய்ப் படிப்பார்க்கினிதாய்ப் பத்திவிளைப்பதாய் உள்ளது.

இந்நூல் முதன்முறை பதிப்பிக்கப்பட்டதன்பின் இயற்றிய ரமணபுராணமும், கீர்த்தித்திருவகவல் முதலிய பலபதிகங்களும் இவ் விரண்டாம் பதிப்பில் சேர்க்கப்பெற்றிருத்தலால், இந்நூல் திரு வாசகவுறுப்பனைத்தும் குறைவறப்பெற்று விளங்குகிறது. மேலும், இப்பதிப்பில் முதற்பதிப்பிலுள்ள சிலபதிகங்களின் பெயர்கள் மாற்றி யமைக்கப்பட்டும் சில பதிகங்களிற் புதியசெய்யுட்கள் சில இயற்றிச்சேர்க்கப்பட்டும் உள்ளன.

ஸ்ரீரமணமுனிவர்விஷயமாக 118 கலைப்பில் 1684 செய்யுள் உடையதாக இந்நூலை இயற்றியுதவிய முருகனருடைய அன்பும் கவித்திறனும், இதனை யாவரும் படித்துப் பயனடையுமாறு வெளி யிட்டுதவிய ஸ்ரீரமணபாதாநந்தருடைய பரோபகாரசீலமும் பாராட் டத்தக்கன.

சற்றேறத்தாழ அறுநூறு பக்கஅளவில் கண்கவர்வனப்பிற் சுத்தமாக அச்சிடப்பட்டுள்ள இதன்விலை ரூ 2–8–0. வேண்டு வோர், சென்னை மயிலாப்பூரில் கலைமகள் காரியாலயத்திற் பெற லாம்.

மலாயாவின்தோற்றம்:—இஃதோர் அரிய பெரிய தேசசரிதப் புத்தகம் என்னலாம். இவ்வாராய்ச்சிநூலை, சுங்குரும்பை, உயர் திரு. பெ. நா. மு. முத்துப்பழனியப்பசெட்டியார் J. P. அவர்கள் அமிழ்தினுமினிய தமிழ்நடையில் ஆக்கியளித்துள்ளனர். காலத் தாற்செய்த இப் பேருதவி, கைம்மாறுவேண்டாக்கடப்பாடெனச் சாலவும் போற்றத்தக்கது.

மலாயா என்பது இந்தியாவின் கீழ்த்திசைப்புறத்து விளங் கும் நெடியதொரு தீபகற்பமாகும். இது சரித்திரத்தில் மிகத் தொன்றுதொட்ட பெருமைவாய்ந்தது. பாரத ராமாயணகாலத் தின்முன்னரே இந்தியரின் குடியேற்றநாடாகவும் இடையிடை அவராட்சிக்கீழிருந்ததாகவும் அறியப்படுவது. இயற்கை செயற் கை ஆகிய எவ்வகைவளனும் நிரம்பப்பெற்றது. எத்துணையோ பல தமிழ்மக்கள் இந்நாட்டின்கண் வாணிகஞ்செய்து வான்பொரு ளீட்டி வாழ்ந்துவருகின்றனர்.

ஆகலின் அந்நாட்டுச் சிறப்பியல்புகளனைத்தும் தாம் நேரிற் கண்டு இன்புறுமாறே தம் தாய்நாட்டினர் பிறரும் இன்புறவேண்டு மென்ற நன்னோக்கத்துடன், இதன் ஆசிரியர் மிக அரிதின்முயன்று ஆராய்ச்சிசெய்து இதனை எழுதியுதவியுள்ளனர்.

நாட்டுக்கோட்டை நகரத்தார் இந்நாட்டுள் ஆங்காங்குள்ள தலங்களைத் தம் கற்பணியாற் சிறப்புறச்செய்ததுபோல, அவர் மரபினரான இந்நூலாசிரியர், தம் சொற்பணியால் இந்நாட்டினைச் சிறப்புறச்செய்திருக்கிறார். மலாயாநாட்டைக்குறித்து ஒருசிறிதும் அறியாதவருங்கூட அதன் வரலாறுகளையெல்லாம் அறிந்தவராகு மாறு மிக விரிந்த பொருளடக்கமுடையதாய் இப்புத்தகம் இயற்றப் பெற்றிருக்கும் முறை பெரிதும் பாராட்டற்குரியது.

முந்நூற்றிருபதுபக்கங்களில் எழுபத்துநான்கு சித்திரவிளக் கங்களோடு நல்லகாகிதத்தில் அழகாக அச்சிட்டுப் பைண்டு செய்யப்பெற்ற இப்புத்தகம் எல்லோரும் வாசித்தற்கு இன்றியமை யாததாகும். இதன்விலை முதலிய விவரம், திரு. பெ. நா. மு. முத்துப் பழனியப்பசெட்டியார் J. P. அவர்கள், சுங்குரும்பை, பினாங்கு: என்ற விலாசத்துக்கு எழுதி அறிந்துகொள்ளலாம்.

திருவாவடுதுறை அம்பலவாணதேசிகமாலை:—இது, சுவர்க்க நீக்கமுதற்காண்டம் முதலிய பலநூல்களையியற்றியவரும் ரஸிகருமான வெள்ளகால் திருவாளர் ராவ்ஸாஹிப். வே. ப. சுப்பிரமணிய முதலியார் B. A. அவர்களால், தமிழ்க்குத் தாயகமாய்விளங்கும் ஆதீனங்களுள் முன்னெண்ணத்தக்க பெருமைவாய்ந்த திருவாவடுதுறையாதீனத்தில் தமிழ்நூற்புலமையும் சைவசமயநூற்புலமையும் வள்ளன்மையும் ஒருங்குடையராய்த் திகழ்ந்த ஸ்ரீலஸ்ரீ அம்பலவாணதேசிகர்மீது வெண்பாயாப்பினால் இயற்றப்பட்டதொரு பிரபந்தமாகும்.

இதனுள் ஆசிரியர் ஒவ்வொருசெய்யுளிலும் தாம் சொல்லக் கருதிய பொருளைக் கேட்போர் உளங்கொளத் தெளிவும் சுவையும் அமைய எடுத்துரைக்கும் அழகு படித்து மகிழத்தக்கது.

தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகத்தாரால் நல்லகாகிதத்தில் கையடக்கமாக அச்சிடப்பட்டுள்ள இப் புத்தகத்தின் விலை பைஸ். 9. வேண்டுவோர் திருநெல்வேலியிற் கீழரதவீதியிலுள்ள தென்னிந்திய சைவசித்தாந்தநூற்பதிப்புக் கழகத்திற் பெறலாம்.

---

பிரமாதிவருஷ திருக்கணித பஞ்சாங்கம்:—இது, யாழ்ப்பாணத்து மட்டுவில் ஸ்ரீ. சி. சுப்பிரமணிய ஐயரவர்களாற் கணிக்கப்பட்டது; சோதிடநூற்பயிற்சியில்லாதாரும் சோதிடநூற்பொருள்களை யெளிதில் அறிந்துகொள்ளும்படி விளக்கியெழுதப்பட்ட பஞ்சாங்க பரிபாஷைவிளக்கம் முதலிய பலகுறிப்புக்களை முன்னர்ப்பெற்றது; விவாகாதி சுபமுகூர்த்தங்களும், இலங்கையிலும் இந்தியாவிலுமுள்ள பிரபல தேவாலய திருவிழாக்களும், மழைபெய்தற்குரிய காலங்களும் ஆகிய இவற்றை விரிக்கும் குறிப்புக்களை முடிவிற் பெற்றது; விரததினங்களையும் திதி வார நக்ஷத்ர யோக கரணங்களையும் வரையறுத்து விளக்குவது; வைதிகர், வணிகர், கிருஷிகர் முதலிய எல்லோர்க்கும் பயன்படத்தக்கது.

வேண்டுவோர், யாழ்ப்பாணத்து மட்டுவில் ஸ்ரீ. சி. சுப்பிரமணிய ஐயரவர்களிடம் பெறலாம்.

---

# தனித்தமிழ்ப்பரீக்ஷைத்தேர்ச்சிக்குறிப்பு.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தார் வெகுதானியஞு பங்குனிமீ 24, 25, 26 (1939-ம் ஞு ஏப்ரல்மீ 6, 7, 8)-ஆம் தேதிகளில் நடத்திய தனித்தமிழ்ப்பரீக்ஷைகளில்தேறிப் பரிசும் யோக்கியதாபத்திரமும்பெறும் மாணுக்கர்களின் அபிதானபத்திரம்.

---

## பண்டிதபரீக்ஷை.

### 2-வது வகுப்பு.

| தொடர்ச்சி நிர். | ரிஜிஸ்டர் நிர். | |
|---|---|---|
| 1 | 16 | வ. முத்துக்குமாரு, c/o ஞானோதய வித்தியாசாலை, மயிலிட்டி தெற்கு, தெல்லிப்பழை போஸ்ட், யாழ்ப்பாணம். |
| 2 | 1 | சீ. நாராயணன், மதுரைத்தமிழ்ச்சங்கக்கலாசாலை, மதுரை. |
| 3 | 2 | மீ. கந்தசாமி, ஷை ஷை |
| 4 | 3 | S. கூர்மாவதாரன், ஷை ஷை |
| 5 | 18 | சி. இராசையா, ஸ்ரீபார்வதிவித்தியாசாலை, சிவியாதெரு, யாழ்ப்பாணம். |

---

## பாலபண்டிதபரீக்ஷை.

### 2-வது வகுப்பு.

| | | |
|---|---|---|
| 1 | 22 | வே. நாராயணசாமி, மதுரைத்தமிழ்ச்சங்கக்கலாசாலை. |
| 2 | 23 | T. முகம்மது அப்துல்லா ஷை ஷை |
| 3 | 21 | ம. இராமகிருஷ்ணன் ஷை ஷை |

---

## பிரவேசபரீக்ஷை.

### 1-வது வகுப்பு.

| | | |
|---|---|---|
| 1 | 32 | G. கோபாலகிருஷ்ணன், மதுரைத்தமிழ்ச்சங்கக்கலாசாலை, மதுரை. (முதற்பரிசு ரூபா 50 பெறத்தக்க தங்கப்பதக்கம்) |

### 2-வது வகுப்பு.

| | | |
|---|---|---|
| 1 | 38 | சு. துரைராஜன், ஸ்ரீ கணேசர் செந்தமிழ்க்கலாசாலை, மேலைச்சிவபுரி, புதுக்கோட்டை ஸ்டேட். |
| 2 | 37 | கு. கந்தசாமி ஷை ஷை |
| 3 | 30 | R. இராஜகோபாலன், மதுரைத்தமிழ்ச்சங்கக்கலாசாலை. |
| 4 | 36 | சு. நாராயணசாமி, ஸ்ரீ கணேசர் செந்தமிழ்க்கலாசாலை, மேலைச்சிவபுரி, புதுக்கோட்டை ஸ்டேட். |
| 5 | 40 | வீ. சிவராமசுப்பிரமணிய ஐயர், கீழத்தெரு, ஆய்க்குடி, (via) தென்காசி. |

மதுரைத்தமிழ்ச்சங்கம்,
4—7—39.

*R. Shanmuga Rajeswaran,*
அக்கிராசனுதிபதி.

---